# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

05.07.2018



யாழ் கல்வியங்காடு

## ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

கல்வியங்காடு

# திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம்



## உத்தம பக்ஷசப்தச [17] குண்ட சஹித புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா யாஹ மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

05.07.2018

# கும்பாபிஷேக சிறப்பு மலர்


| | | |
|---|---|---|
| **நூல் தலைப்பு** | : | கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2018 |
| **வெளியீடு** | : | ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தானம்<br>கல்வியங்காடு, யாழ்ப்பாணம்,<br>இலங்கை. |
| **பதிப்பு** | : | 05.07.2018 |
| **நூலின் அளவு** | : | B5 |
| **தாள்** | : | 70g பாங் |
| **பக்கங்கள்** | : | 05.07.2018 |
| **பிரதிகள்** | : | 300 |
| **அச்சுப்பதிப்பு** | : | குரு பிறிண்டேர்ஸ், திருநெல்வேலி. |
| **பக்கங்கள்** | : | 58 |


மூலமூர்த்தி

## திருப்பணிச்சபை கனடா

| | |
|---|---|
| பொருளாளர் | சின்னத்தம்பி பரஞ்சோதி |
| உப பொருளாளர் | குலேந்திரநாதன் சண்முகராஜா |
| | சுரேஸ்குமார் வேலாயுதபிள்ளை |
| இணைப்பாளர் | ஜெகன் நடராஜா |
| கணக்காய்வாளர் | முகுந்தன் சிவலிங்கம் |
| செயற்குழுவினர் | சம்பந்தர் தம்பையா |
| | கணேஸ் சுப்பையா |
| | மனோகரன் நாகராஜா |
| | புஸ்பராசா குமரேசு |
| | செல்வரத்தினம் மகாதேவ |
| | தயாபரன் சுப்பிரமணியம் |
| | பிரசன்ன துரைசிங்கம் |
| | பாலசுந்தரம் தம்பையா |

## திருப்பணிச்சபை

| | |
|---|---|
| தலைவர் | சின்னத்துரை ராசரத்தினம் |
| உப தலைவர் | பரமசிவம் துஷியந்தன் |
| செயலாளர் | பாலகிருஷ்ணன் பிரதீபன் |
| பொருளாளர் | தர்மகுலராசா சபேசன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | கந்தப்பிள்ளை ஸ்ரீரங்கநாதன் |
| | பசுபதி பரராஜசிங்கம் |
| | அருளானந்தம் கேதீஸ்வரன் |
| | கந்தசாமி யசோதரன் |
| | சிவயோகநாதன் துஷியந்தினி |
| | சுப்பிரமணியம் சுரேஸ்குமார் |

## ஆலய பரிபாலனசபை

| | |
|---|---|
| தலைவர் | கந்தப்பிள்ளை ஸ்ரீரங்கநாதன் |
| உப தலைவர் | செல்லையா இராசலிங்கம் |
| செயலாளர் | பசுபதி பரராஜசிங்கம |
| உப செயலாளர் | பரமேஸ்வரன் குமுதன் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள் | ஸ்ரீரங்கநாதன் துசிதன் (ராஜா) |
| | தர்மகுலராசா சபேசன் |
| | பாலசுப்பிரமணியம் பகீரதன் |
| | நாகேந்திரம்ஞானபாஸ்கரன் |
| | பாலகிஷ்ணன் புஸ்பராஜ் |
| | ராம்குமார் கிஷோக்குமார் |
| | விஜயரட்ணம் யோகலிங்கம் |

## உள்ளே...

1. ஆசியுரைகள்
2. வாழ்த்துரைகள்
3. எமதுரை
4. தலவரலாறு
5. வீரபத்திரர் வழிபாடு
6. கும்பாபிஷேகம்
7. வீரபத்திரர் போற்றித் திருவகவல்
8. ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமாள் திருவூஞ்சல்.
9. ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமான் ஆலய சண்முகப் பெருமான் மீது பாடிய திருப் பொன்னூஞ்சல்
10. எங்கள் ஊரும் வீரத்திரர் ஆலயமும்
11. நவசந்திப் பாடல்கள்
12. நன்றியுரை



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

## அருளாசிச் செய்தி

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

சிவனே செல்வர்கள்!

யாழ்ப்பாணம் நல்லூர் கல்வியங்காட்டில் எழுந்தருளி நல்லாட்சி புரியும் வீரபத்திர சுவாமிகளுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவது ஆலயத்திற்கும், ஊர் மக்களுக்கும் புனிதத்தை தருவது ஆகும்.

நீண்ட பழமையான கல்வியங்காட்டிற்கே பெருமை தருகின்ற இவ் ஆலயம் யாழ்ப்பாண கந்தபுராண கலாச்சாரத்தை கொண்டுள்ள வரலாற்றை எடுத்தியம்புவதாகும். ஆணவத்தை ஒழித்து நல் வாழ்க்கையினை நமக்கு தருவது ஆன்மீகமாகும். இதனை வெளிப்படுத்தும் வகையில் கந்தபுராணத்தில் வீரபத்திரருடைய வரலாறு தெளிவுபடுத்துகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு பத்திரகாளியும் வீரபத்திரரும் விளங்குகின்றனர். இவ்வாலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று நாட்டில் நிரந்தரமான சமாதானமும் சுபீட்சமும் வளர எம்பெருமான் ஆசீர் வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI : NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : + 94 11 259 1344
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# ஆசிச் செய்தி

இறைபணியில்
**சுவாமி சிதாகாசானந்தா**
சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்.

கிராமங்கள் தோறும் மக்கள் ஒன்றிணைந்து ஆலயங்கள் அமைப்பது, பழையஆலயங்களை புனரமைப்பது அவற்றில் கும்பாபிஷேகப் பெருவிழாக்களை நடாத்துவது ஆகியன எல்லாம் மக்களிடையே தெய்வ நம்பிக்கையை வளர்க்கும் செயற்பாடுகளாக அமைவதுடன் மக்களிடையே ஒற்றுமையையும் வளர்க்கின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி உடனுறை ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருக்கோவில் புனராவர்த்தனம் செய்யப்பட்டு இன்று (05.07.2018) மஹா கும்பாபிஷேகம் செய்யப்படுவது சிறப்பாகும்.

சிவபெருமானுக்கு அழைப்பு விடுக்காமல் தக்கன் செய்த யாகத்திற்கு சென்ற சிவபெருமானின் மனைவியும் தக்கனின் மகளுமாகிய தாட்சாயினி தந்தையால் சிவநிந்தனை செய்து அவமானப் படுத்தப்பட்டதால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் யாகத்தீயில் விழுந்து தன் உயிரை மாய்த்தும் கொண்டார். செய்தியறிந்த சிவன் "வீரபத்திரர்" எனும் உக்கிர மூர்த்தியாக வடிவெடுத்து வந்து தக்கனின் யாகத்தைத் துவம்சம் செய்தார்.

இவ்வாறு அதர்மங்களை அழிக்கும் தெய்வமாக வீரபத்திரப் பெருமானை கிராமங்களில் பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றி வருகின்றனர்.

கும்பாபிஷேகம் என்பது பிரபஞ்சசக்தியை கும்பம், அக்கினிகாரியம், வேதபாராயணம் முதலிய கிரியைகள் மூலம் விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்யும் நிகழ்வாகும். இவ்வாறு சக்தியூட்டப் பெற்ற விக்கிரகத்தை கும்பாபிஷேக தினத்தன்று நேரில் தரிசிக்காமல் கண்ணாடியில் தோன்றும் விம்பத்திலேயே தரிசிக்கின்றோம். இந்தச் செயற்பாடானது நாம் என்றும் எங்கும் அப்பரம் பொருளின் விம்பங்களையே தரிசிக்கின்றோம் என்னும் உண்மையை விளக்குகின்றது.

இத்தனை சிறப்பு வாய்ந்த கும்பாபிஷேக விழா இனிதே நிறைவேறவும் இதனை முன்னிட்டு வெளிவரவுள்ள மலர் சிறப்பாக வெளிவரவும், இதில் பங்கு கொள்ளும் அடியார்கள் என்றும் சாந்தி பெறவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல விரபத்திரப் பெருமானையும் பூஜ்ய குரு தேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka
T.P. No : 021-3213151

திகதி..............................

# செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகம் ஆனந்தம் அடைகின்றேன். பரம் பொருளாகிய சிவனே வீரபத்திராக தோற்றம் பெற்று காத்தருளிய வரலாற்றைப் புராணங்கள் நன்கு எடுத்துரைத்துள்ளன. கிராமிய வழிபாட்டு மரபில் வீரபத்திரர் வழிபாடு முதன்மையானது. பொங்கிப் படைத்து ஊரை உறவைக் காத்திட வேண்டி வீரபத்திரரிடம் விண்ணப்பிப்பது பாரிய மரபாகும்.

பக்தியோடு தம் குல தெய்வமாகிய பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருக்கோவிலை கல்வியங்காட்டு மக்கள் பலவருடங்களாகப் பேணிக்காத்து வருவது பெருமைதரும் செய்தியாகும். தம் குலதெய்வத்தின் திருக்கோவிலை பல இலட்சம் ரூபா செலவில் அழகுற அமைத்துக் காத்த அன்பர்கள் வாழ்த்துக்குரியவர்கள். தெய்வத் திருத்தலங்கள் புனிதம் பெறும் போது ஊர் செழிக்கும் மண் விடியும் மகா கும்பாபிஷேகம் சிறக்க துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

# ஆதின பரம்பரை குரு முதல்வர் அவர்களின் ஆசியுரை.


"பிரதிஸ்டாபூஷணம்"
"சிவாகம சிரோண்மணி"
**பொன். வரதராஜக்குருக்கள்**
(ஆலய ஆதீன கர்த்தா, பரம்பராகுரு முதல்வர்)


இலங்கையின் வடபால் யாழ்பபாணம் கல்வியங்காடு திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி உடனுறை ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருக்கோவில் உத்தம பக்ஷ சப்தச (17) குண்ட சஹித புனராவர்த்தன அஷ்டபந்தன மஹாயாஹ மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனப் பெருஞ்சாந்திப் பெருவிழா கல்வியம்பதி பக்தர்களினதும், கனடா வாழ் பக்தர்களினதும் பெருமானுடைய திருவருளினாலும், எனது பாரம்பரிய குல தெய்வமான ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமிக்கு ஆனித் திங்கள் 21ஆம் நாள் (05.07.2018) உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் கும்பாபிஷேகம் இறையருளினால் எனது கரங்களை கொண்டு நிகழ்த்தி வைக்கும் பாக்கியம் கிடைக்கப்பெற்றேன்.

இற்றைக்கு எனது நான்கு சந்ததியினரினால் மேற்கொண்டு வரும் இக் குருப்பணி, எனது அறிவுக்கு எட்டிய காலம் முதல் இன்று நடைபெறும் கும்பாபிஷேகமானது 1965ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐந்தாவது கும்பாபிஷேகமாகும். இந்த ஐந்து கும்பாபிஷேகத்தில் நான்கு கும்பாபிஷேகம் எனது தலைமையில் மேற்கொள்ளப்பட்டமை எனது வீரபத்திர பெருமானின் திருவருளே!

சிவபணியை செய்து வரும் வம்சாவளியினர் பெருமானுடைய திருவருளினால் இக் கும்பாபிஷேகத்தையும் நிகழ்த்தி வைக்கும் பெரும்பேறு பெற்றுள்ளதோடு அத்துடன் அளவில்லா ஆனந்தம் அடைகின்றேன்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கமைய பக்திசிரத்தையுடன் வீரபத்திர பெருமானுக்கும் ஏனைய பரிவாரா மூர்த்திகளுக்கும் அழகிய வர்ணவேலைகள் மேற் கொண்டு புதுப்பொலிவுடன் காட்சிதரும் இவ்வாலயம் மேன்மேலும் சிறப்புபெற்று விளங்குவதற்கு வீரபத்திர சுவாமி அருளாசி என்றென்றும் கிடைக்க வேண்டும் என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் கல்வியங்காடு

ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம்

SRI PATHIRAKAALI SMEATHA SRI VEERAPATHIRAR SWAMI DEVASTHANAM

கல்வியங்காடு – Kalviyankadu யாழ்ப்பாணம் - Jaffna இலங்கை – Sri Lanka.

பதிவு இல. H.A/ S / J.A / 732 ......................200.........

# ஆசிச் செய்தி

**ஆலயபரிபாலன சபை**
ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருக்கோவில்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
புனருத்தாரணம் பூர்வ புண்ணியம்
கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

ஈழமணித் திருநாட்டிலே யாழ்ப்பாண மாநகரிலே கல்வியம்பதியிலே எழுந்தருளி அருள் பாலிக்கும் பத்திரகாளி உடனுறை வீரபத்திரப் பெருமானுக்கு புணருத்தாரணம் முடிவுற்று இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

பண்டைய காலம் தொட்டு ஊரையும் ஊர் மக்களையும் காத்து வளமும் நலமும் பண்பான சுற்றங்களும் மகிழ்வுடன் காத்த எம்பெருமானுக்கு சித்திரத்தேர், தீர்த்தக்கேணி, இராஜகோபுரம் என அனைத்தும் இருந்த போதிலும் ஆலய மண்டபங்கள் நீண்டகாலம் புனருத்தாரணம் செய்யப்படாதிருந்தது.

சிவனொடாக்கும் மனிதர் ஊரில் தேடினும் இல்லை
அவரோடொப்பர் இங்கு யாவரும் இல்லை
நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்
தேடித்திரிந்து திருப்பணி செய்பவர்.

அக்குறையினை நிவர்த்தி செய்ய எம் பெருமானை திருவுளங் கொண்டு ஊர் மக்களினதும், கடல் கடந்து வாழும் கிராம மக்களினதும் பங்களிப்புடனும் இன்று புதுப்பொலிவு பெற்று வண்ணமயமாக எம்பெருமானின் இருப்பிடம் மிளிர்கின்றது.

இத்திருப்பணியில் பங்கேற்ற அடியவர்கட்கும் சிற்பாசாரியார்கட்கும், வர்ணப் பூச்சாளர்களுக்கும், மற்றும் பலவழிகளிலும் உதவி புரிந்த பக்தர்களுக்கும் எம்பெருமானின் நித்திய அனுக்கிரக கிருபாகடாட்சம் கிடைக்க வேண்டுமென உளமாரப் பிரார்த்தித்துப் பெருமானின் மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற நடைபெற வீரபத்திரப் பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசிகளை கூறி அமைகின்றோம்.

# வாழ்த்துச்செய்தி

**அ.உமாமகேஸ்வரன்,**
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

"ஆளுடைத் தனி ஆதிடை நீத்சதாரு வேள்வி முற்ற விரும்பிய தக்கனோர்
நீள் சிரத்தை நிலத்திடை வீட்டிய வாள்படைத்த மதலையைப் போற்றுவாம்"

எனத் திருச்செந்தூர்ப் புராணம் போற்றுகின்ற வீரபத்திரப் பெருமான் வீற்றிருந்து அருளொளி வீசிக்கொண்டிருக்கின்ற, யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னன் காலந்தொட்டே சிறப்புற்று விளங்குகின்ற கல்வியங்காடு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம் இவ்வூர் மக்களினதும், கனடா கலாசார ஒன்றியத்தினதும் அர்ப்பணிப்பான செயற்பாட்டின் மூலம் 05.07.2018 அன்று மஹாயாகக் கும்பாபிஷேக விஞ்ஞாபனப் பெருஞ் சாந்திப் பெருவிழாக் காணவிருப்பது எம்பெருமான் பெருங்கருனணயே. இறைசெயலாய் நிகழ்ந்தேறும் இந்நிகழ்வு சிறப்புற்றமைய எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

# கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி

**திரு. தயாளன் பேரம்பலம்**
தலைவர்
கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியம்
**திரு. பரஞ்சோதி சின்னத்தம்பி**
பொருளாளர்,
ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தான திருப்பணிச் சபை கனடா

கடவுள் பக்தியும் ஆர்வமும் மிக்க மக்கள் வாழும் இயற்கை அழகு மிக்க விவசாய பூமி கல்வியங்காடு. இக்கிராமத்தில் பாரம்பரிய கிராமிய வழிபாட்டு மரபு பேணிக்காக்கப்பட்ட ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம் இன்று பெரு வளர்ச்சி கண்டு வருகின்றது.

நாட்டில் ஏற்ப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கோவிலில் சில பாதிப்புக்கள் ஏற்பட்டு இருந்தன இவற்றை சீர் செய்யும் முகமாக கல்வியங்காட்டில் ஓர் திருப்பணிச் சபையும் கனடாவில் ஓர் திருப்பணிச் சபையும் அமைக்கப்பட்டு இரு சபைகளும் கலந்தாலோசித்து சிறந்தமுறையில் எமது குலதெய்வமாகிய வீரபத்திரர் ஆலயத்தை புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திருப்பணி வேலைக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியத்தின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது. இவ்வகையில் ஆலயம் சாஸ்திர விதிக்கமைய நிர்மாணிக்கப்பட திருவருள் கூடியுள்ளது.

இத்திருப்பணிக்கு எமது மக்கள் குறிப்பாக கனடா வாழ் கல்வியங்காட்டு மக்களும் வேறு சிலரும் தங்களுக்குள் இருக்கும் பொருளாதார கஷ்டங்களையும் பொருட்ப்படுத்தாது தங்களால் இயன்ற பொருளாதார உதவிகளைத் தந்தது மட்டுமல்லாமல் நிதி சேகரிப்பதற்காக தங்கள் சொந்த வேலைகளையும் தள்ளி வைத்து உழைத்துள்ளார்கள். எம்மக்களின் கூட்டு உழைப்பினால் எம்மைக்காக்கும் தெய்வத்திற்கும் ராஜகோபுரம், சித்திரத்தேர். தீர்த்தத்திருக்ணேி, அன்னதான மண்டபம், திருக்கைலாச வாகனம் என்பன அமைத்து தமது விசுவாசமான பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்தவகையில் இத் திருப்பணிக்கு பங்களிப்புச் செய்த அனைத்து அடியவர்களுக்கும் சரீர உதவி புரிந்த பக்தர்களுக்கும் இத்திருப்பணியை திறம்பட செய்து முடித்த சிற்பாச்சார்யர்களுக்கும் நன்றி கூறுவதுடன் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் கும்பாபிஷேகத்தின் போது நிகழ்கின்ற கிரியைகள் அனைத்திலும் மக்கள் பங்குபற்றி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எம்பெருமான் அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்து வாழ்த்துவதில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியமும் வீரபத்திரர் திருப்பணிச் சபை கனடாவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

# வாழ்த்துச் செய்தி

ஞானபாஸ்கரோதய சங்கம்,
கல்வியங்காடு.

கல்வியங்காடு பழமையும் பெருமையும் புதுமையும் வாய்ந்த ஒரு பூர்வீக கிராமமாக யாழ்பாண வரலாற்றுப் பதிவேடுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும். சங்கிலிய மன்னன் காலத்தில் உருவாகிய சட்டனாதீஸ்வரர், வீரமாகாளி அம்மன் பொன்று கல்வியங்காடு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயமும் பழமை வாய்ந்த ஒரு ஆலயமாகும்.

எமது கிராமத்து மக்களின் குல தெய்வமாக போற்றி வழிபடும் இவ்வாலயம் 1950 களில் மாமரங்களின் நிழலிலே அமைந்த ஒரு சிறிய கொட்டகையில் வீரபத்திரர் என்று கூறப்பட்ட ஒரு கல்லையே காணமுடிந்தது. இன்று வீரபத்திரப் பெருமான் மூலமூர்த்தியாகவும் விநாயகர், அம்மன், துர்க்கை, சந்தானகோபாலர், முருகப்பெருமான். சனீஸ்வரர், வைரவக்கடவுள், சண்டேஸ்வரர் எனப் பல்வேறு பரிவாரமூர்த்திகள் புடைசூழ சிற்ப வேலைப்பாடுகளுடன் வானுயர வளர்ந்த கோபுரம், சிற்பவேலைப்பாடுகள், சித்திரை வேலைப்பாடுகளுடன் கூடிய சுற்றுப்புற வீதிகளுடன் அழகிய கலைக் கோவிலாகக் காட்சியளிக்கின்றது.

இவை அனைத்தும் எம்பெருமானின் அருளினாலும் எமது பெரியவர்கள், இளைஞர்கள், புலம்பெயர் வாழ் மக்களின் உடல் உழைப்பினாலும் உருவாகியுள்ளது என்றால் அது மிகையாகாது. கல்வியங்காட்டு கிராமங்களின் கடின உழைப்பிற்கும் ஒற்றுமையாகப் பணியாற்றும் சிறப்பிற்கும் எமது ஆலயம் எடுத்துக்காட்டாக உள்ளது. ஆணவக்காரர்களையும், அடாவடித்தனம் செய்பவர்களையும் தண்டித்து அடக்குவதுடன் தன்னை நாடிவந்து வழிபடும் அடியவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் காத்து அருளி வேண்டுவதை வேண்டிய வண்ணம் ஈந்தருளி நல்வழிகாட்டி அருள் பாலிக்கின்றார். எங்கள் குலத்தெய்வம் அதி சக்தி வாய்ந்தது. காலத்துக்கு காலம் உரிய நிர்மானப்பணிகளை நிறைவேற்றுவது நல்ல நிர்வாகிகளை ஆலய பரிபாலன சபைக்குத் தேர்ந்தெடுப்பதுவும் எம்பெருமானுடைய தீர்மானங்களே. எமது ஆலய பரிபாலனசபை அறங்காவலர்களுக்கு முன்னுதாரமாகத் திகழ்கின்றனர்.

எமது கிராமத்தில் உள்ள ஞானபாஸ்கரோதய சங்கமும் 100 ஆண்டுகளை விரைவில் பூர்த்திசெய்யவுள்ள ஒரு அறிவாலயம். இளைஞர்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் எமது சங்கம் உறுதுணையாக உள்ளது. எமது கிராமம் அருளாட்சியிலும் அறிவாட்சியிலும் சிறந்து விளங்க வீரபத்திரர் ஆலயமும் ஞானபாஸ்கரோதய சங்கமும் எமது கிராமத்தின் இரு கண்களெனப் போற்றப்படுகின்றன.

அறிவாளிகள், ஆசாரசீலர்கள், நீதிமான்கள், ஆன்மீகப் பெரியார்கள், மனித விழுமியப் பண்புகள் பின்பற்றி வாழுகின்ற பெருமக்கள் வாழுகின்ற நிறைவான எமது ஊரில் வாழ்வது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்றது. தினமும் எமது ஆலய மணி ஓசை கேட்டு விழித்தெழுந்து தமது பணிகளைத் தொடங்கும் எமது கடின உழைப்பாளிகளின் முயற்சியே இத்தகைய ஆலயம். எமது ஆலயம் இன்னும் பல்லாண்டு காலம் எமது மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக அமையவேண்டும். எம்பெருமானின் அருளாட்சி மேலும் சிறப்படைய வேண்டும்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க."

# ஆலய ஒப்பந்ததாரர் அவர்களது வாழ்த்துச் செய்தி

இறைபணி வித்தகர், தேசமாணி,
**இணுவையூர் செல்லையா சிவலிங்கம்,**
கயோ லங்கா பிறைவேற் லிமிற்றட்

அருட் பொலிவும் ஆன்மீகப்பொலிவும் நிறைந்த ஞான பூமியாக வரலாற்றுச் சிறப்புடன் திகழ்கின்ற கல்வியங்காடு என்ற புண்ணிய பூமியில் அருளமுதை வழங்கிக் கொண்டிருக்கின்றது ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தானமாகும்.

அருளாட்சி வேண்டி தன்னை நாடி வந்து மனமுருகி வழிபடும் அடியவர்களுக்கு வரங்கள் ஈன்றருளும் வீரபத்திரருக்கு புணருத்தாரணம் செய்ய வேண்டும் என்று நினைத்த தர்மகர்த்தா சபையினர் திருப்பணி சபையினர், புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் கல்வியங்காட்டு உறவுகளின் தூண்டுதலினாலும் மேற்கொள்ளப்பட்ட புணருத்தாரண முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய தர்மசீலர்களின் தர்மத்தையும் நன்கொடைகளையும் பெற்று சற்றும் கண் துஞ்சாது ஆற்றிய சரியை தொண்டானது சிவ புண்ணியத்தை சேர்ந்தது ஆகும்.

இவ்வாலயமானது அடியவர்களின் நலன் பேணி நித்திய, நைமித்திய, காமிய பூசைமுறைகேற்ப சாஸ்தரங்களில் கூறப்பட்டுள்ள ஆகம விதிமுறைகளுக்கேற்ப புணருத்தாரணம் செய்யப்பட்டு ஸ்ரீ வீரபத்திரப் பெருமானின் குடமுழுக்கில் நனைந்து புண்ணிய சீலர்களாக தொண்டர் தம் பெருமைகளை பேசும் அடியவனாக வீரபத்திரரின் பாத கமலங்களில் சரண் புகுந்து புணருத்தான வேலைகளைப்பற்றி ஒரு சில கருத்துக்கள்.

ஆலயத்தை புணருத்தாரணம் செய்யப்போகின்றார்கள் என்ற செய்தி எனது சம்பந்த பகுதி மூலம் அறிந்தேன். அதற்கான கேள்வி பத்திரத்தை பெற்று அதன் மூலம் வேலையினை பெற்றுக் கொண்டேன். சட்டத்தரணி முன் ஒப்பந்தம் எழுதப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பமானது. வீரபத்திரரின் அருளோடுஆலயத்தின் வேலைகள் நடைபெற்றது. புதுப்பொலிவுடன் 05.07.2018 இல் குடமுழுக்கு இடம்பெற போகின்றது என நினைக்கும் போதே உடம்பெல்லாம் சிலிர்த்து கண்ணீர் மல்கிறது.

இவ் ஆலயத்திற்கு பலவருடங்களுக்கு முன்னர் அமரர் நித்தியானந்தன் அவர்கள் அழைத்ததையிட்டு தேர் திருவிழா அன்று உட்பிரகார சனீஸ்வரன் சந்நிதானத்தில் இருந்து முன்வாசல் வரை எம்பெருமானை காவிச் செல்லும் பாக்கியம் கிடைத்தது. அது இன்று என்னை தனது ஆலயத்தை கட்டு என்று கட்டளையிட்டுள்ளார். அதன் பயன் வடபகுதியில் தலை சிறந்த ஆலயமாக புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது.

ஆரம்ப காலங்கில் சூரியனையும் நீரையும் நெருப்பையும் காற்றையும் வழிபட்ட மக்கள் காலப்போக்கில் தத்தம் இஷ்ட தெய்வங்களை கல்லிலும் மரத்திலும் செப்பிலும் திருவுருவங்களாக அமைத்து வழிபட்டனர். அவ்வாறு மனிதனின் ஆன்ம ஈடேற்றத்திற்காக அமைக்கப்பட்டவையே இன்று நாம் காணும் ஆலயங்களாகும்.

ஆலய கட்டிட அமைப்பு என்பது மனிதனின் எண் சாண் உடம்பைக் குறிப்பதாகும். எனவே ஆலயத்தை அமைக்கும் போது அளவுகள் மிகவும் துல்லியமாக கணிக்கப்பட்டு அமைக்கப்படும். அந்தவகையில் எம் பெருமானது ஆலயம் சரியான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதே எனது கருத்து.

இவ்வாலயத்தில் நடைபெறும் அற்புதமான மக்கள் பாவிக்கும் குடி தண்ணீர் தெய்வீக அருள் நிறைந்த இடமாக எல்லோரும் கருதுகின்றார்கள். காலையில் இருந்து இரவு வரை தொடர்ந்து மக்கள் வந்து தங்கள் குடிதண்ணீரை எடுத்துச் செல்வதை அறிய முடிகின்றது. எம்பெருமானுடைய கிணறு தண்ணீர் அவ்வளவிற்கு பரிசுத்தமான நீராக இருப்பது எம்பெருமானின் அருள் என்பதையும் நாம் அறியத்தருகின்றோம்.

இவ் ஆலய திருப்பணி வேலைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த திருப்பணி சபையினர், தர்மகர்த்தா சபையினர் மற்றும் சீர்காழியில் இருந்து வரவழைக்கப்பெற்ற இந்திய சிற்பாச்சாரியார்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கட்டுமாணப்பணி திறன்பட செய்த பிரதீபன் (பிரபா) குழுவினருக்கும் வர்ணவேலை செய்த உடுவில் சந்திரன் குழுவினருக்கும், நிலத்திற்கான திராசோ வேலை செய்த தேவா குழுவினருக்கும், மின்சார வேலைகளைச் செய்த தெல்லிப்பளை ஜெயதாஸ் குழுவினருக்கும் அனைவரிடமும் இருந்து நான் எதிர்பார்த்ததை விட அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்ததையிட்டு மனம் பூரித்து நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத் திருப்பணி வேலைகளினை தடங்கல் இல்லாமல் இனிதே நிறைவேற்றி கொடுத்த ஸ்ரீ வீரபத்திர பெருமானை சிரம் தாழ்த்தி கரம் கூப்பி அவன் திருவடிகளை இறுகப் பற்றி வணங்கி கொள்வதோடு எம்பெருமானின் தெய்வீக திருவருள் அனைவருக்கும் இனிதே கிடைக்க வேண்டும் என மனமுருகிப் பிரார்த்திக்கின்றேன்.

"அன்பே சிவம்"

*சிவத்தமிழ் வித்தகர்*
கலாபூஷணம்
**சிவ.மகாலிங்கம்**
"சிவஜோதி"
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொ.பே.இல : 021 221 2226

**Siva - Mahalingam**
**B.A, M.A, Dip.in.Ed, S.L.E.A.S,**
**Retd : Assitant Director**
*"Sivajothy"*
*Potpathy Road,*
*Kondavil East, Kovdavil.*

## வாழ்த்துச் செய்தி

இலங்கையைச் சிவபூமி என அழைத்தவர் தவயோகி திருமூலநாயனார். சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு ஞான பூமியாக மிளிர்ந்து பக்தர்கள், சித்தர்கள் யோகிகள், ஞானிகள் எனப் பலரும் நமது மண்ணில் நடமாடித்திரிந்தார்கள். யாழ்ப்பாண இராச்சியத்தை தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் சைவமும் தமிழும், மண்ணின் மருத்துவமாகிய சித்த மருத்தவமும் மன்னர்களின் ஆதரவோடு சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்தன. நல்லூர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாகத் திகழ்ந்து நல்லூருக்கு அருகில் இருக்கும் கல்வியங்காட்டில் பரம்பரைச் சித்த வைத்தியர்கள் பலர் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்தார்கள். அருள் ஒளி வீசும் பல ஆலயங்கள் கல்வியங்காட்டில் காணப்படுகின்றன.

சிவனுடைய முக்கியமான இருபத்தைந்து மூர்த்தங்களில் ஒன்றாகிய பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப் பெருமானுக்கும் இம் மண்ணில் வாழ்ந்த மூதாதையர்கள் ஆலயம் ஒன்றினை அமைத்தார்கள். சிறிய ஆலயமாக அமைக்கப்பட்டு அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த வீரபத்திரர் ஆலயம் கிராம மக்கள் அனைவருடைய பங்களிப்புடன் இன்று மகோற்சவம் நடைபெறும் பெரும் ஆலயமாக வளர்ச்சி அடைந்துள்ளது. சித்திரத்தேர், இராஜகோபுரம், எனப் பெரும் ஆலயத்திற்கு தேவையான சகல அம்சங்களுடனும் இன்று வீரபத்திரர் ஆலயம் காட்சி அளிக்கின்றது. ஆலயம் புனரமைக்கபட்டு பதினேழு குண்டங்கள் அமைக்கப்பட்டு பெருஞ்சாந்தி வைபவம் என்ற அழைக்கப்படுகின்ற மகா கும்பாபிஷேகம் இன்று இங்கு சிறப்பாக நடைபெறுகின்றது.

பரமகருணாநிதியாகிய பரமசிவனை மதியாது தக்கன் செய்த யாகத்தை தகர்த்தெறியச் சிவன் எடுத்த வடிவமே வீரபத்திரவடிவம் எனப் புராணங்கள் கூறுகின்றன. தன்னை நாடி வரும் பக்தர்கள் அனைவரினதும் துன்ப துயரங்களை நீக்கி அருள் செய்யும் ஞான மூர்த்தமாக பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப் பெருமான் காட்சி தருகின்றார். வீரபத்திரரைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் அடியார்களிடம் இறைவன் தங்களையும் தங்கள் சந்ததியையும் என்றும் கைவிடார். காப்பாற்றுவார் என்ற தளராத நம்பிக்கை காணப்படுகின்றது.

குலதெய்வத்தினுடைய ஆலயம் நித்திய நைமித்திய கிரியைகளுடன் சிறப்பாக இயங்கினால் மக்களின் வாழ்வு சிறக்கும். பொல்லாத நோய்கள் எதுவும் மக்களைப் பீடிக்காது. கொலை, களவு ஆகிய பஞ்சமாபாதகங்கள் கிராமத்தில் நடைபெறாது. மக்களின் வாழ்வு என்றும் மலர்ச்சியானதாகவும், அமைதியானதாகவும் இருக்கும். எங்களுடைய மண் மீண்டும் சிவபூமியாக மாறும்.

# வாழ்த்துச் செய்தி

**திருமதி. செல்வ அம்பிகை நந்தகுமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனிதனை மனித நேயத்துடன் வாழ வழிசமைப்பது ஆலய வழிபாடாகும். ஆலயம் மனிதனுடைய பூரணமான ஆன்மீக வளர்ச்சிக்கு நிறைவான பணியைச் செய்கின்றது. இதனால் தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று ஔவையார் பாடியுள்ளார்.

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம் புனருத்தாரண கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இலங்கையில் வீரபத்திரக் கடவுளுக்கான ஆலயங்கள் குறைவானவையாகும். அவற்றுள் ஒன்றாக எமது ஆலயமும் அமைந்திருப்பது எமது ஊரவர் அனைவருக்கும் பெருமையும் மகிழ்ச்சியுமாகும். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயத்தில் வேண்வோர் வேண்டுவதாக ஈய்ந்து மக்களைக் காத்துவரும் ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சவாமி எழுந்தருளி அருளாட்சி புரிகின்றார். இங்கு நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழா ஊருக்கும் மக்களுக்கும் சிறப்பைத் தருவதாகும்.

இவ்வாலயத்தில் கும்பாபிஷேக நிகழ்வினை நிதியாலும், நிலையான இறை பணியினாலும் நிகழ்த்தும் வீரபத்திரசுவாமி அடியவர்களையும் ஆலய தர்மகர்த்தா சபையினரையும் மனதார வாழ்த்துகின்றேன். இந்நிகழ்வினை சிறப்பாகச் செய்யும் கும்பாபிஷேக சிவாச்சாரியார்களுக்கும் குருக்களுக்கும், கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமியின் அருளாசி கிடைப்பதாக.

# வாழ்த்துச் செய்தி

கோ. சிவசுந்தரமூர்த்தி

எல்லாம் வல்ல யாழ் கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து இத்தருணம் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேக வைபவமானது இனிதே நிறைவேற எம்பெருமான் அருள்பாலித்துள்ளமை யாம் பெற்ற பெரும் பேறென உளம் உருகி வணங்குகிறேன்.

ஆலயங்கள் ஒரு கிராமத்தின் பெருமைக்கும் புனிதத்துக்கும் காரணமாக அமைவன. அதேபோல் ஆலயங்களில் அவ்வப்போது நிகழ்த்தப்படும் கும்பாபிஷேக கிரியைகள் அவ்வாலயங்களையும் ஆலயச் சூழல்களையும் புனிதமடைய வைப்பதுடன் அதில் ஈடுபடும் அனைத்து உள்ளங்களையும் உணர்வினால் நிரப்பி ஆற்றுப்படுத்த வல்லன.

கும்பாபிஷேகம் தொடர்பான கைங்கரியங்களை அடையாளப்படுத்தவும் ஆவணப் படுத்தவும் தொகுப்பாகும். இக் கும்பாபிஷேக மலர் வெளியீடு ஒரு தெய்வீக பணியாகும். இம் மலரிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதற்கு அடியேனுக்கு இறையருள் கிடைத்தமை உண்மையில் ஒரு தெய்வீக பணியை மேற்கொள்வது போன்ற உணர்வைத் தருகிறது.

இந்தவகையில் இறை அருள்சேர இனிதே கைகூடுகின்ற இப்புனித பணியில் பங்குகொள்ளும் யாவரும் பெரும்பாக்கியம் பெற்றவர்களே. இலங்கையில் வீரபத்திர பெருமானது ஆலயங்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. எம் பெருமானது திருத்தலத்தினை பெறும் பேற்றை பெற்ற வகையிலும் கல்வியங்காடு எனும் எம்பதியும் தனித்துவம் பெற்ற ஒன்றாக கொள்ளத்தக்கது.

எம் பெருமான் கோவில் கொண்டருளும் இத்திருத்தலமானது கடந்த காலங்களிலும் பல கும்பாபிஷேக நிகழ்வுகளால் புனிதம் பெற்றமையை வரலாற்று குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

1966 ஆம் ஆண்டு பராப வருடம் சித்திரை மாதத் திரயோதசித் திதியில் நயினை கைலாய நாதக்குருக்களின் நல்லாசியுடன் குடமுழுக்கு செய்து வைக்கப்பெற்ற நாளே ஆலய கும்பாபிஷேக வரலாற்றின் முதற்படியாக அமைந்தது. இக்கைங்கரியமானது ஆலய உரிமையாளர்கள் வழிவந்த கந்தையா சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியால் கைகூடியதாக வரலாறுகள் சுட்டி நிற்கின்றன.

1975ஆம் வருடம் ஆலய நிர்வாகத்திற்கென பரிபாலன சபை அமைக்கப்பட்டதன்

பின்னர் 1976ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 5ஆம் நாள் பத்திரகாளி, ஆறுமுகசாமி, மகாமண்டபம், யாக மண்டபம் என்பன அமைக்கப்பட்டு குடமுழுக்கு வைபவம் இடம்பெற்றது. தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு புரட்டாதி திங்கள் 14ஆம் நாளில் விநாயகர் ஆலய புணரமைப்புடன் குடமுழுக்கு வைபவம் இடம்பெற்றது. இதன் பின்னர் கர்ப்பக்கிரக மண்டப புனருத்தாரண நடவடிக்கைகளுடன் 1990ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 03ஆம் நாளிலும் இராஜகோபுர கும்பாபிஷேக கிரியைகள் 2013ஆம் ஆண்டு தைத்திங்கள் 19ஆம் நாளிலும் இடம்பெற்று கும்பாபிஷேக கிரியைகளினால் புனிதம் பெற்ற தெய்வீக மணம் பரப்பும் திருத்தலமாக மிளிர்ந்தது.

குறிப்பாக ஆலய வரலாற்றில் 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட சித்திரத்தேர் வடிவமைப்பு, புதிய புனித தீர்த்தக் கேணி அமைப்பு, 2013ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இராஜகோபுர அமைப்பு, 1991ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 19ஆம் நாள் முதல் இடம்பெற்று வரும் கொடியேற்ற வைபவத்துடன் கூடியதான 10 தினங்கள் மகோற்சவ நிகழ்வுகள் மறக்க முடியாத வரலாற்றப்பதிவுகளாகும்.

இந்த வரலாற்றுப் பதிவுகள் இளந் தலைமுறையினருக்கு மரபு பிறழா ஆலய வழிபாட்டு நடைமுறைகளை எடுத்தியம்பி அவர்களால் முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் துணை நிற்கும் என நம்புகின்றேன்.

ஆலயங்கள் எமது வாழ்வியல் அம்சங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. எமது சம்பிரதாயங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எல்லாம் இவ்வழி வந்தவையே. இன்று எமது வாழ்வியல் அம்சங்கள் எல்லாம் ஒரு சவால் நிறைந்த சூழலுக்குள் சிக்குண்டு நிற்பது கவலைதரும் ஒன்றாகும். எமது பிரதேசங்களில் ஆலயங்கள் வளர்ந்தளவுக்கு ஆன்மீகம் வளரவில்லை. கோபுரங்கள் உயர்ந்தளவுக்கு மக்களின் உள்ளங்கள் உயரவில்லை.

ஆன்மீக சிந்தனைகளும் உயர்வான எண்ணங்களும் இலட்சியங்களும் மக்கள் மனத்தில் கலந்திட, ஆலயங்கள் பங்களிப்பு இன்றியமையாதவை. இன்று நவீன காலத் தேவைகளையும் அனுசரித்து ஆலய நடைமுறைகளுடன் மக்களை ஒன்றிணைய வைக்கும் பொருத்தமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டிய ஒரு நிலை சைவ ஆலயங்களுக்கு பாரிய பொறுப்பாகி நிற்கிறது.

இந்தவகையில் எம் மக்களின் வாழ்க்கை நெறி அன்பு தழுவியதாக அறம் சார்ந்ததாக அறிவு பூர்வமானதாக அமைதி நிறைந்ததாக அமையக் கூடிய வகையில் சைவ ஆலயங்களில் பொருத்தமான செயற்திட்டங்களையும் முன்னெடுப்பதில் கரிசனை கொள்ளவேண்டியது சைவப் பெரியோர்களது கடமையாகும்.

இன்று கும்பாபிஷேக கிரியைகளால் புனிதம் பெறும் எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானத்தில் கொலுவீற்றிருந்து அருள்பாலிக்கும் வீரபத்திரப் பெருமான் தம்மை அண்டிடும் அடியவர்களுக்கும் ஆலயச் சூழலில் வாழும் அடியார்களுக்கும் இக் கும்பாபிஷேக கைங்கரியங்கள் நிறைவேற சகல வழிகளிலும் ஒத்துழைத்த யாவருக்கும் அருள்பாலிக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி

**திருப்பணிச்சபை**
பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருக்கோவில்,
கல்வியங்காடு.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

இலங்கை மணித்திருநாட்டிலே வடபகுதியிலே கள்ளியூர் என்றழைக்கப்பட்ட கல்வியங்காடு எனும் செழிப்பான கிராமத்திலே வீற்றிருந்து அருளாட்சி புரியும் பத்திரகாளி உடனுறை ஸ்ரீ வீரபத்திரப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவதையிட்டு திருப்பணிச்சபையினராகிய நாம் பேருவகை அடைகின்றோம்.

கடந்த 20 மாதங்களுக்கு மேலாக கிராம மக்களாலும் வெளியூர் மக்களினாலும் வழங்கப்பட்ட பேருதவியினால் இந்தக் கைங்கரியம் கைகூடியுள்ளது. பலகாலமாக மெருகூட்டப்படாது ஓடுகளால் வேயப்பட்டு போதிய இடவசதியின்றி இருந்து வந்த ஆலய மண்டபங்கள் இன்று பொலிவுற்று வர்ணமயமாக காட்சி தருகின்றன.

இத்திருப்பணியானது ஆரம்பிக்கும் போது மண்டபச்சுவர்களை உயர்த்துவதும், நிலத்தினை செப்பனிடுவதுமாகவே திட்டமிடப்பட்டது. ஆயினும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் இத்திருப்பணி வேலைகளைப் பொறுப்பேற்ற இணுவையூர் செ. சிவலிங்கம் அவர்களினதும் திருப்பணிச்சபையினரது முயற்சியாலும் கிராமங்களினதும், கனடா கலாசார ஒன்றியத்தினர் மற்றும் புலம்பெயர் வாழ் உறவுகளினதும் பங்களிப்பினாலும் இன்று ஆலயம் முழுவதும் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இதனைத் செய்து முடிப்பதற்கு உதவிபுரிந்த நல்லுள்ளங்களுக்கும், கனடா கலாசார ஒன்றியத்தினருக்கும், இப்புனரமைப்பினை அழகாகவும், சிறப்பாகவும் செய்த இணுவையூர் செ. சிவலிங்கம் மற்றும் குழுவினருக்கும், வர்ணப்பூச்சு வேலை செய்தவர்களுக்கும், சிற்பக்கலைஞர்களுக்கும், மின்னினைப்பு செய்தவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இவ் மகா கும்பாபிஷேக பெருவிழாவை நடாத்த உதவிபுரிந்த யாகசாலை அமைப்பாளர்கட்கும், ஒலி ஒளி அமைப்பாளர்களுக்கும், தவில் நாதஸ்வர வித்துவான்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிபுரிந்த எம்பெருமான அடியார்கட்கும் நன்றி கலந்த பாராட்டுகளை தெரிவிக்கின்றோம்.

இன்றைய நன்னாளிலே எமது ஆலய பரம்பரை குரு சிவாகம சிரோன்மணி சிவஸ்ரீ பொ. வரதராஜக் குருக்கள் தலைமையிலே எம்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், பஞ்ச தள இராஜகோபுரத்திற்கும் நடைபெறும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகமானது சிறப்புற நடைபெற எம்பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி நல்லாசிகளை வழங்குகின்றோம்.

# வாழ்த்துச் செய்தி

**பொறியியலாளர் குழாம்,**
**கோ. பிரதீப், ம. தனுசன்,**
**யோ. தினேஸ்வரன், ம. நிமலன்,**
**பா. பிரதீபராஜ்**

யாழ்மண்ணிலே வரலாற்று புகழ்மிக்க இறைவனின் அருட்செல்வங்களும், பொருட்செல்வங்களும் மிக்க கல்வியம்பதி எனும் கல்வியங்காட்டில் சிவபெருமானின் அறுபத்துநான்கு திருக்கோலங்களுள் ஒன்றான சிவனின் வீரச் செயலை வெளிப்படுத்தும் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமான் வீற்றிருந்து எமது அடியவர்களுக்கு கேட்டவற்றைகொடுத்து அருள்பாலித்து காத்துவருகின்றார்.

எம்பெருமான் ஆலயத்தில் வில்லு மண்டபமும் அத்துடன் இனைந்த பரிவார மூர்த்திகளின் மண்டபங்களும் கட்டப்பட்டு ஆலயத்தினை மேலும் அபிவிருத்தி செய்து அழகுறசெய்வதற்கு இறைவனின் அருளாலெ பொறியியலாளர்களாக வளர்ந்திருக்கும் அடியவர்களாகிய நாம் ஸ்ரீ வீரபத்திர பெருமானுக்கு எம்மாலான பொறியியல் ஆலோசனைகளை வழங்கி எமது பணியும் எம்பெருமானக்கு கிடைக்கப்பெற்றமையிட்டு அக மகிழ்வடைகின்றோம்.

அத்துடன் 05.07.2018 அன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறவேண்டும் என வாழ்த்தி எமக்கும் எம் ஊர் அடியவர்களுக்கும் எல்லாச் சிறப்புக்களும் கிடைக்க என்றும் அருள் புரிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று அவனருளாலே அவன்தாழ் வணங்கி வாழ்வோமாக.

# எமதுரை


**சதா. சிவ. சந்திரா**
**சந்திரவதனா சிவபாலசிங்கம்,**
சைவப்புலவர்,
மதுரை தமிழ்ச்சங்கம்.

என்னுரையை யான் எழுத அருள் புரிந்த வீரபத்திரின் அருளை எப்படி எழுதுவது தென்பதே தெரியவில்லை. எனது தகப்பனாரின் ஜனன பூமியாகிய கல்வியங்காட்டைப் பற்றி தகப்பனார் கூறக் கேட்டிருக்கின்றேன். நான் பிறந்து வளர்ந்து தவழ்ந்து விளையாடிய தெல்லாம் வீரபத்திரர் வீதியிலே என்று பெருமையாகக் கூறுவார். அது மட்டுமன்றி பள்ளிப் படிப்பிலே நாட்டமில்லாதிருந்த தன்னை கல்வியறிவுள்ள ஒருவனாக மாற்றி புராண இதிகாசங்களை யெல்லாம் பயமின்றி வாசிக்கக்" கற்றுக் கொடுத்த வீரபத்திர அந்தணர் பரம்பரையை அவர் என்றும் பெருமையாகப் பேசுவார். இத்தகைய பெருமைமிகு வீரபத்திரப் பெருமான் எங்கள் குலதெய்வமாகும். வீரபத்திரப் பெருமானது தல விஷேசங்களைப்பற்றி அறிய வேண்டும், எழுதவேண்டும் என்ற எண்ணம் எனது மனதில் நீண்டகாலமாக இருந்து வந்தது.

சமீபத்தில் ஒருநாள் வீரபத்திரருடைய கோயிலுக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்ப்பட்டது. அப்பொது இந்த கும்பாபிஷேகத் தினத்திலே இந்நூலை வெளியிடலாம் என்ற எண்ணம் என்னுள்ளே தோன்றியது. அதற்குரிய ஆதாரங்களை எங்கே தேடுவேன் என்று கவலைப்பட்டு கொண்டிருந்த வேளையில்தான் செல்வி. சுபாசினி தேவராசாவின் பல்கலைக்கழக இந்துநாகரிகம் பாடத்திற்காக எழுதப்பட்ட ஆராய்ச்சி கட்டுரை கிடைத்தது. அதிலிருந்து தேவையானவற்றை எடுத்துத் தொகுத்ததே "வீரபத்திரம்" என்ற பெயரில் வெளியிடப்படும் இந்நூலாகும். இதற்கு முழு உரிமையாளர் செல்வி சுபாசினி தேவராசா தான் என்பதை பெருமையுடன் கூறி நிற்கின்றேன்.

யாரால் எது நடக்க வேண்டுமோ அது அவர்களால் நடக்கும் என்பதற்கிணங்க இக்காரியம் எனது சிறுமுயற்சியால் நடைபெறவேண்டும் என்பது வீரபத்திரரின் சித்தம் போலும். "வீரபத்திரா வீரபத்திரம்" என்ற வசனத்தை நான் தந்தையார் மூலமாகக் கேட்டதுண்டு. ஏன் அப்படிக்கூறுகிறார் என்று கேட்டபோது இவ்வூர்மக்கள் எவ்வித பயமுமின்றி வீரபத்திரரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு பயமின்றி இருந்திருக்கின்றார்கள் என அறியக் கூடியதாக இருக்கிறது. வீரபத்திரர் இம்மையில் நம்வீட்டைக் காப்பதோடு மறுமையிலும் நமக்கு வீடு பேறருளுவார். அருளும் திருவும் நிறைந்த வீரபத்திரரின் திருவருள் எல்லோர்க்கும் கிடைக்க வேண்டும் என வேண்டி நிற்கும் அடியாள்.

# கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரப்பத்திரர் தல வரலாறு




இறைவன் எடிங்கும் நிறைந்தவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பது எம்மவர் நம்பிக்கை. ஆனால் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமான இறைவனை அலயங்களிலே வழிபடுதலே சிறந்தது எனக் கண்டனர் நம் முன்னோர். இறைவனை அமைதியாகத் தொழுதருள் பெற அமைக்கப்பட்ட இடங்களே ஆலயங்களாகும். ஆலயம் என்றால் ஆன்மாக்கள் லயப்படும் இடம்எனப் பொருள்படும். பசுவின் பால் அதன் மூலை மூலமே வெளிப்படும். அதேபோல இறை சக்தியும் ஆலயங்கள் மூலம் வெளிப்படும்.

மக்கள் தங்களது வாழ்ககையை நன்னெறிப்படுத்தவும், இறைருள் பெற்றுய்யவும் கோயில்களை அமைத்தனர். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றார் ஔவை மூதாட்டி. இதன்படி கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி கோயில்கள் இல்லாத இடங்கள் இல்லை. இதற்கிணங்க அமையப்பெற்ற ஆலயமே கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலயமாகும். யாழ்பாணம் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டில் கோயில் கொண்டு அருள் பாலித்திருக்கும் வீரபத்திரசுவாமியின் வரலாற்றைப் பார்போம்

கல்வியங்காடு என்ற இக் கிராம மக்கள் பிரதான தொழில்கள் விவசாயமமும், வியாபரமாகும். இப்பெயர் ஒரு காலத்தில் கள்ளிக்காடாகக் காணப்பட்டதால் ஏற்பட்டது என்பர் சிலர். ஆனால் கற்றிந்தோர் பலரைக் கொண்டிருந்தமையால் உண்டானதென் போரும் உளர். ஆனால் இவ்வூரில் இருக்கும் "புலவனார் வீதி" என்பதைப் பார்க்கும் போது பின்னைய கருத்து ஏற்புடையதாகின்றது.

இங்குள்ள வீரபத்திர ஆலயம் நானூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். இவ்வாலயம் கலை, பண்பாடு, கல்விவளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் பரம்பரைக் கதைகள் காணப்படுகின்றன. கல்வியங்காட்டு மக்களின் காவல் தெய்வமாக

## ஆலயத்தில் நடைபெற்ற மகோற்சவ நிகழ்வின் நிழல்கள்...






விளங்குபவர்தான் வீரபத்திரப் பெருமாள். காலத்தால் பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் கர்ணபரம்பரைக் கதைகளையும் அற்புதற்களையும் இவ்வூர் மக்கள் பக்தியோடு கூறி வருகின்றார்கள்.

கல்வியின் பதியாம் கல்வியங்காட்டில் கறுப்பையா வளவில் அடியார்களைப் பாதுகாத்து நன்னெறிப் படுத்தும் பொருட்டு கோயில் கொண்ட எம்பெருமான் ஆலயம் காலத்தால் மிகப் பழமையானதாகும். கிராமமக்களால் வழிபாடு செய்யப்படும் பேறு பெற்ற எம்பெருமான் தானாக வளர்ந்த ஒரு கல்லில் பூவரச நிழலில் தோன்றினார். மக்களுக்கு அருள் புரிந்து ஆட்கொள்ள தான்தோன்றியாகத் தோன்றிய எம் அப்பன் வீரபத்திரரின் பெருமையைச் சொல்லவும் முடியாது அருளும் திருவும் நிறைந்த வீரபத்திரருக்கு ஆலயம் அமைக்க வேண்டும் எண்ணத்தை அவர் சித்தத்தில் உண்டாக்கினார் எம்பெருமான். மாதர் வீரகத்தியார் அன்பனால் சிறு ஆலயம் அமைத்து "தானகத் தோன்றிய அக்கல்லை வைத்து" வழிபாடு செய்து வந்தார் என்பது வரலாறு. இவ்வருள் பொழியும் மூர்த்தியின் ஆரம்பகால ஆலய உரிமையாளர்களாக மாதர் வீரகத்தியாரும் அவருடைய வழிவந்த முருகேசு வேலுப்பிள்ளை கந்தர் ஆகியோரின் வழித்தோன்றல்களே இருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இவர்களால் ஆலயப் பாரமரிப்புக்காக ஆலயத்தின் பெயரில் பல நிலங்களும் எழுதிவைக்கப்பட்டுள்ளன.

பழமையும் பெருமையும் புதுமையும் நிறைந்த இவ்வாலயம் 1966ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் சிலகாலங்கள் கவனிப்பாரற்ற நிலையில் ஆதரவற்ற ஆலயமாக ஆடு, மாடுகள் உறங்கும் இடமாகவும் இருந்துள்ளமை தெரியவருகின்றது. கல்விழுந்து செல்லரித்து புற்றும் புதருமாக பாழடைந்த கோயிலாக இருப்பதைக் கண்ட இவ்வூராராகிய திரு கந்தையா சண்முகலிங்கம் என்பவரன் முயற்சியாலும் ஊர் மக்களின் ஆதரவினாலும் எம்பெருமான் ஆலயம் சிறிது மெருகூட்டப்பெற்று 1966ஆம் ஆண்டு பராபவ வருடம் சித்திரை மாத திரியோதசித்திதியில் நயினை கைலாசநாதக் குருக்களின் நல்லாசியுடன் குடமுழுக்கு செய்து வைக்கப்பட்டது. இக்குடமுழுக்கு வைபவத்தை கைலாசநாதக் குருக்கள் பிரதம குருவாக அமர்ந்து கிரியைகளில் ஈடுபட அவருக்குத் துணையாக கோயில் குருமார்களான ஐ. சோமசுந்தரக் குருக்கள் அவர்களும், தம்பையாக் குருக்களின் வாரிசுகளும் ஈடுபட்டனர். இந்நன்நாளே ஆலய வளர்ச்சிக்கு வித்திட்ட பொன்னாளாகும்.

அடுத்ததாக நாம் கோயில் வரலாற்றிலே குறிப்பிடவேண்டிய விடயம் இக்கோயிலுக்கு அயலில் குடியிருக்கும் அந்தணர் பரம்பரையனராகிய தம்பையாக் குருக்களின் வாரிசுகளே இன்று வரை இங்கு பூசை செய்வது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 1975ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒரு ஆலயபரிபாலனசபை தெரிவு செய்யப்பட்டு ஆலயப் பொறுப்புக்கள் யாவும் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பரிபாலனசபையினரின் தலைவராக திரு. கா. முத்தையா (ஆசிரியர்) அவர்களையும் செயலாளராக திரு. சி. கந்தையா (ஆசிரியர்) அவர்களையும் பொருளாளராக தி. க. முத்துலிங்கம் (சமாதான நீதவான்) அவர்களையும் செயற்குழுவாகக் கொண்டு மொத்தம்

பதினொரு பேர் இச்சபையின் அங்கத்தவர்களாகப் கொண்டு விளங்கி இவ்வாலயத்தைப் பல வழிகளிலும் மேன்மையுறச் செய்ததுடன் பல திருப்பணி வேலைகளையும் திறம்படச் செய்து முடித்த பெருமை இந் நிர்வாக சபையினரையே சாரும்.

ஆரம்பத்தில் எம்பெருமான் ஆலயத்திற்கு செல்வதற்கு சிறந்த பாதைகூட இருக்கவில்லை. வாகனத்தில் செல்வதானால் பருத்தித்துறை வீதி வழியாகவே வரவேண்டி இருந்தது. இக்குறையை நீக்கவிரும்பி பரிபாலன சபையினர் டிஸ்பென்சரி வீதி, ஆலயத்தின் வடக்குவீதியால் பருத்தித்துறை வீதியுடன் இணைக்கப் பெற்று "வீரபத்திரர் வீதி" எனப் பெயரிட்டமை மறுக்கமுடியாததொன்றாகும். இவ்வீதி இணைப்பு அடியார்களுக்கும் ஊர்மக்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதெனலாம்.

ஆரம்பத்தில் இவ்வாலயத்தில் வீரபத்திரருக்கு மட்டுமே கருவறை காணப்பட்டது. 05.05.1976 அன்று பத்திரகாளி பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்புதான் ஸ்ரீ பத்திரகாளி உடனுறை வீரபத்திரப்பெருமான் ஆலயம் எனப் பெயர்பெற்றது. பெருமான் சக்தியோடு சேர்ந்த பின் அவரது அருளாட்சி அதிகமாயிற்றென்றே சொல்லலாம்

பழுதடைந்த கோயில் ஒன்றினை முன்போல் திருத்தி அமைக்கும் திருப்பணி மிகவும் மேன்மை வாய்ந்ததாகும். அதில் ஈடுபடும் அடியார்களுக்கு உயர் பேறு கிடைக்கும் என்பது சைவாகமங்கள் கூறும் உண்மை. செங்கட்டிடமாக இருந்த ஆலயமானது மிக அழகிய கட்டிடங்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கிய சீமெந்துக் கட்டிடமாக விளங்குவது பெருமைக்குரியது ஆகும். அருள் நிலையிலும், அன்பு நிலையிலும் நின்று அருள்பாலிக்கும் ஸ்ரீபத்திரகாளி சமேத விரபத்திரப் பெருமாள் ஆலயத்தை சீமெந்தால் அமைப்பதில் இவ்வூர் மக்கள் எல்லோரும் பங்கு கொண்டு நடத்திய பெருமை ஊர்மக்களையே சாரும். இலங்கையில் அற்புதத் தெய்வமாக அருள் ஒளி பரப்பும் கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப்பெருமான் தேவஸ்தானமானது சிறந்த ஆலய அமைப்புக்கு ஏற்புடையதாக காணப்படுகின்றது.

நிர்வாகம் ஆலயத்தைப் பொறுப்பேற்ற காலத்தில் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பத்திரகாளி, ஆறுமுகசுவாமி ஆலயங்களும் மகாமண்டபம், யாக மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டு 1976ஆம் ஆண்டு வைகாசி 5ஆம் திகதி குடமுழுக்கு செய்யவும், பத்திரகாளி பிரதிஷ்டை செய்யவும் எம்பெருமான் அருள் கிடைத்தது. அதன் பின் நித்திய நைமித்திய பூசைகள் விசேட திருவிழாக்களும் அலங்கார உற்சவங்களும் வெகு சிறப்பாக ஆலயக்குருக்களினால் ஆற்றப்பட்டு வந்தன. இவ் வாலயத்தில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1976ஆம் ஆண்டு தைமாதம் 31ஆம் திகதி புனருத்தாரணம் செய்யப்பட்டு அதே ஆண்டு புரட்டாதிமாதம் 14ஆம் திகதி குடமுழுக்கு செய்யப்பட்டது.

கர்ப்பக்கிரக மண்டபம் பழமையாக இருந்த காரணத்தினால் வெடிப்பு கண்டுள்ள இவ்வாலயத்தை புனருத்தாரணம் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்த அடியார்களினதும் அன்பர்களினதும் பெருவிருப்பின் பேரில் 1988ஆம் ஆண்டு ஆவணி

மாதம் 29ஆம் நாள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. தற்போது புதுப்பொலிவுடன் கம்பீரமாக விளங்கும் இவ்வாலயம் இவ்வூர் அடியார்களினாலும் புலம்பெயர் வாழ் அடியார்களினாலும் மனமுவந்தளிக்கப்பட்ட பல இலச்சங்கள் ரூபா செலவில் கைதேர்ந்த ஸ்தபதிகளினாலும், சிற்பக்கலைஞர்களினாலும், ஓவிய விற்பன்னர்களாலும் அழகுற அமைக்கப்பட்டது. மணிமண்டம், விநாயகர், கௌரிஅம்பாள், சந்தான கோபாலர், சுப்பிரமணியர், சனீஸ்வரன், சண்டேசுவரர், துர்க்காதேவி, லிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி, சூரியன், சந்திரன், வைரவர் ஆகிய பரிவாரமூர்த்திகளுடனும் பொலிவுற விளங்கும் இவ்வாலயம் 1990ஆம் ஆண்டு ஆணித்திங்கள் 3ஆம் நாள் நயினை சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்களின் நல்லாசியுடன் நடைபெற்றது. குருக்களுக்கு உதவியாக வரதராசக் குருக்களும் அவரது வாரிசுகளும் கிரியைகளில் உள்ளன்போடு ஈடுபட்டு ஆலய வழிபாட்டின் முக்கிய அம்சமான பெருஞ்சாந்தி எனப்படும் மஹா கும்பாபிஷேகத்தினை நிகழ்த்தி முடித்தனர். அடியார்களும் ஊர்மக்களும் நலமுற வாழவேண்டும் என்ற பெருநோக்கோடு செய்யப்படதொரு நிகழ்வாகும்.

எம் பெருமான் ஆலயத்தில் எல்லா உற்சவங்களும் நடைபெறாமை அடியவர் களுக்கு மனக்கவலைக்குரிய விடயமாயிருந்தது. அப் பெரும் மனக் குறை நீக்கும் பொருட்டு மகோற்சவம் இடம்பெறத் தக்க வகையில் கொடித்தம்பமும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சித்திரா பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவமானது இடம்பெறத் தக்கவகையில் 1991ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 19ஆம் நாள் முதலாவது கொடியேற்ற நிகழ்வுடன் பத்து நாட்கள் மகோற்சவப் பெருவிழா ஆரம்பமாகி நடைபெறவும் பரிபாலனசபை ஒழுங்கு செய்தது. மகோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று ஆண்டுகள் கட்டுத்தேரில் வீதியுலாவந்து அருள்பாலித்த எம்பெருமானை நான்காவது மகோற்சவ காலங்களில் புதிய சித்திரத்தேரில் எழுந்தருள வேண்டுமென்ற அடியவர்களின் அவாவை நிறைவேற்ற 1993ஆம் ஆண்டு தைத்திங்கள் 3ஆம் நாள் பொதுக்கூட்டத்தில் அடியவர்களால் தேர்த்திருப்பணிச்சபை தெரிவு செய்யப்பட்டு அவ்வாண்டே அடியவர்கள் பங்களிப்பாலும் ஒரே வருடத்தில் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. அவனருளால் அன்றி வேறொன்றுமில்லை என்பது வெளிப்படை.

முக்கியமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் அமையப் பெற்றனவே சிறந்த ஆலயமாகும். என்பது ஆகமங்களின் கருத்து. மகோற்சவங்களில் தீர்த்தத்திருவிழா இறை வனது அருளலைக் குறிப்பதாகும். இந் நாளில் ஆலய இறைவனை திருமுழுக்காட்டி நாமும் தீர்த்தமாடுவது தெரிந்ததே. இவ்வாலயத்தில் திருமஞ்சனக்கிணற்றில் நீராடி அருள்பாலித்து எம்பெருமான் தீர்த்தக்கேணியில் நீராடத் திருவுளம் கொண்டார். மேலும் அவரது திருவருளை உணர்ந்த தீர்த்தோற்சவ உபயகாரராகிய கந்தைய நடராசா அவர்கள் தனது சொந்தச் செலவிலே நான்கு பக்கமும் படிகளையுடையதான தீர்த்தக் கேணி ஒன்றை 1993ஆம் ஆண்டு ஆடிமாதம் 22ஆம் நாள் ஆரம்பித்து நான்காவது மகோற்சவ தீர்த்தத்திருவிழாவன்று மங்களநாயகி சமேதராய் மங்களநீராட 25.04.1994 இல் உபயமாக உருவாக்கிக் கொடுத்தார். இதில் சிறப்பு யாதெனில் 24.04.1994இல் புதிய சித்திரதேரில் உலாவந்து 25.04 1994இல் புதிய தீர்த்தக் கேணியில் நீராடியுள்ளார் என்றால் அவரருள்தான் என்னே!

தொகுத்து நோக்கும் போது இச்சந்நிதானம் இடைப்பட்ட காலத்தில் பூசை வழிபாடு இன்றி மண்டபங்களும், சிதைந்த கூரைகளும் உடையனவாய் தெரிந்த உள்ளங்களில் சோதிக்குள் சோதியாய் விளங்கும் எம்பெருமானுக்கு இறைபணியாம் தூய நெறியில் வாழ்ந்து வீரபத்திரர் திருவடிகளையே செல்வமாகக் கருதும் அடியார்கள் பிற்காலத்தில் அரும்பெரும் நிதியில் ஆலயத்தை அழகுற அமைத்து மாண்புறு மண்டபங்களும் கலைத்திறன்மிக்க கர்ப்பக்கிரகத்தினையும் அழகாக அமைத்துள்ளனர். விநாயகர், கௌரியம்மை, சந்தானகோபாலர், முருகன் முதலாய பரவாரமூர்த்திகளும் புடைசூழ விளங்கும் எம்பெருமானுடைய ஆலயமானது 25 ஆண்டுகளில் மூன்று குடமுழுக்குகளை கண்டுள்ளமையும் பெருமைக்குரியதாகும்.

இன்னொரு பெருமையும் இவ்வாலயம் கொண்டுள்ளதெனலாம். இங்கு பூசை செய்து வருகின்ற பூசகர்கள் ஒரே பரம்பரையினர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இதன் ஆரம்பகாலப் பூசகராக தம்பையாக் குருக்கள் அமைகிறார். தம்பையாக் குருக்களைத் தொடர்ந்து அவரது மகன் பொன்னையாக் குருக்களும், தம்பையாக் குருக்களின் தம்பி மகன் இரத்தினக் குருக்களும், அவரது தம்பி சோமசுந்தரக் குருக்களும் இவர்களைத் தொடர்ந்து பொன்னையாக் குருக்களின் மகனாகிய சிவாகமதத்துவமணி சிவாகம கிரியாகலாபமணி பிரம்மஸ்ரீ வரதராசக் குருக்கள் ஆலயத்தின் பிரதமகுருவாக விளங்கிவருகிறார். இடைப்பட்ட காலத்தில் அதாவது 1930 - 1940 காலங்களில் இங்குள்ள பண்ணிசை வகுப்புக்களும், புராணபடன வகுப்பும் நடைபெற்று வந்ததாகச் செவிவழிச் செய்திகளால் அறியக்கூடியதாகவுள்ளது. அயலில் வாழ்ந்து வந்த சிறுவர்களுக்கு திண்ணைப்பள்ளி போன்று கோயிலில் பாடம் புகட்டி வந்தமை பெருமைக்குரிய விடயமாகும். பாடசாலைக் கல்வியில் நாட்டமில்லாத பலரைப் பண்டிதத் தன்மையுள்ளவர் களாக மாற்றிய பெருமை இவ்வாலய மூத்த குருக்கள் பரம்பரைக்குரியதாகும்.

தற்போது ஆலயத்தின் பிரதமகுருவாக பொ. வரதராஜக் குருக்களும் வாரிசு களுமே இருந்து வருகிறார்கள். மேலே கூறிய சிவாச்சாரியார் பரம்பரையினர் ஆலயத்திற்குச் செல்லும் அடியார்களின் நன்மதிப்புக்கும் வணக்கத்திற்கும் உரியவர்களாக விளங்குகின்றனர். அன்பும் பண்பும் படைத்த ஒழுக்க சீலர்கள் வீரபத்திரப் பெருமானைத் தம் குலதெய்வமாக ஆராதிப்பார்கள். ஆலயத்தில் அன்றாடம் நடைபெறவேண்டிய பூசைகள், கிரியைகள் யாவற்றையும் முறையாகச் செய்வதோடு சரியைத் தொண்டுகளும் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவர் களுடைய பக்தியோடும், உணர்ச்சியோடும் கூடிய பூசையிலே பக்தர் குழாம் பெருகி பக்திநெறி வளர்கிறது. பெருமான் அருள் நிறைந்து அனைவருக்கும் சகல வளங்களும் நிறைக...


## ஆலயத்தின் வளர்ச்சிப் பாதையில்...



மூலவர்



ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர்



பாலஸ்தானத்தின் பின்னர் மூலவரும் பரிவார மூர்த்திகளும்



பாலஸ்தானத்தின் பின்னர் எழுந்தருளித் தெய்வங்கள்



## வீரபத்திரர் வழிபாடு

வீரபத்திரப் பெருமானை வீரபத்திரர் என வழங்குவர். இச்சொல்லில் உள்ள வீர என்பது வீரத்தையும் பத்ர என்பது நன்மையினையும் குறித்து நிற்பதாகக் கொண்டு வீரத்தினையும் நன்மையினையும் நல்கும் தெய்வமாகக் கொண்டு வீரபத்திரரை மக்கள் வழிபட்டு வருகிறார்கள். ஆரம்பத்தில் வீரபத்திரசுவாமி வழிபாடானது கிராமிய தெய்வ வழிபாடகவே இருந்து வந்துள்ளது. இலங்கைத் திருநாட்டின் பல பாகங்களிலும் காவல் தெய்வமாக ஆலயம் அமைத்து வழிபடும் அளவிற்கு இவ்வழிபாடு இங்கு பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வீரபத்திர சுவாமிக்கும் சிவனுக்கும் வேறு பாடு இல்லை என்பது பழைய புராண இதிகாசங்களினதும் வரலாற்று நூல்களதும் கருத்தாகும். இன்று இவ்வழிபாடு சைவம் என்ற பெருநதியில் கலந்து மக்களுடன் இரண்டறக் கலந்து விளங்குகின்றது. அந்த வகையில் பிரசித்தி பெற்றதே கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர தேவஸ்தானமாகும்.

சைவத்தின் முழு முதற் கடவுள் சிவன் எங்கும் நிறைந்தவராயும் எல்லாம் வல்லவராயும் எல்லாம் அறிந்தவராகவும் காணப்படுபவர். அவரது லீலைகள் சொல்லில் அடங்காதன, சொல்லி முடிக்க இயலாதன. அவர் தம் திருக்குமரர் நால்வர். விநாயகர், சுப்பிரமணியர். வீரபத்திரர், வைரவர் ஆகியோரே. மக்களும் தேவரும் உலகிலே அறம் நலிந்து மறம் ஓங்கும் காலங்களில் அக்கொடுமையின் கடுமை தாங்காது பேரிடருக்கு ஆளாகக் கண்டு சிவபெருமான் தமது பேரளுடமை காரணமாகத் தோற்றுவித்தருளியவர் களே இந்நால்வரும் ஆவர்.

கஜமுகாசுரனது அட்டகாசத்தை அடக்கி ஆட்கொள்ளவே விநாயகப் பெருமானது அவதாரம் ஆகும். அதேபோல சூரபத்மனின் கொடுமை தாங்க முடியாமல் தேவர்களும் மக்களும் கலங்கிய வேளையில் சூரனைச் சங்காரம் செய்ய உற்பத்தியாக்கியவர்தான் முருகப்பெருமான். சிவனை மதித்திடாது யாகம் செய்த தக்கனின் கர்வமடக்கி அவனது கொட்டத்தை அடக்க சிவபெருமானில் இருந்து தோன்றியவர்தான் வீரபத்திரர். தன்னை மதியாத பிரமதேவரின் அகந்தையை அடக்க உற்பத்தி செய்யப்பட்டவர்தான் வைரவர். இவ்வாறு அசுரர்களின் கர்வத்தை அடக்கி ஆட்கொள்ளும் பொருட்டு தமது மூர்த்தங்களைத் தோற்றுவித்தார்.

## சிவனுக்கும் வீரபத்திரருக்கும் உள்ள தொடர்பு

சிவனுடைய மூர்த்தங்களுள் ஒன்றாக விளங்குபவர் வீரபத்திரர் என்றாலும் சிவன் வேறு வீரபத்திரர் வேறு அல்லர் என்பது சைவசமய உண்மை.

“அந்திலான் பெருமேனியன் கறைமிடறணிந்த
வெந்தை தன் வடிவாயவனுதல் விழியிடையே
வந்து தோன்றியே முன்னுறநின்றன் மாதோ
முந்து விரபத்திரரெனுந் திறனுடைய முதல்வன்”
(கந்தபுராணம் வீரபத்14)

சிவபெருமான் தான் நினைத்த தொரு திருமேனியைக் கொண்டருள்வான் என்பதை “நிறுத்திடுவான் நினைத்த மேனி நின்மலனருளழனாலே” என்ற சிவஞானசித்தியாரின் சுபக்க பாடல் 65 தெளிவாக்குகின்றது. நாம் யாதொரு தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாக எழுந்தருளி வந்தருள்புரிவர் மாதொரு பாகனாகிய சிவபெருமான் என்பதை

“யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாக
யாங்கே மாதொருபாகனார் தாம் வருவார்”

என்ற சித்தியார் குறிப்பு (பாடல் 115) புலப்படத்துகின்றது. சிவனுடைய அறுபத்து நான்கு திருக்கோயில்களில் சிவனது வீரச் செயலை வெளிப்படுத்தி நிற்பது வீரபத்திர மூர்த்தமாகும். சிவனுக்கு அறுபத்து நான்கு வடிவங்கள் கூறப்பட்டாலும் அருவுருவத் திருமேனியாகிய லிங்க வடிவத்தை கருவறைக்குள் நிறுவி வழிபடுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வழக்கம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் காணப்படுகின்றது.

## திருநாமங்களும் திருவுருவங்களும்.

தெய்வீகச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு வீரபத்திரருக்குப் பல நாமங்கள் கூறப்பட்டுள்ளன. உக்கிரன், வில்லி, சிம்புளாகோன், முக்கணன், சடையோன், யானைமுகனுக்கிளையோன், குரோதனன், செக்கர்வானிளத்தன், சிறுவிதி, பத்திரைக்குக் கேள்வன., தீனதயாபரன், என்ற திருநாமங்கள் வீரபத்திருக்குரியன என்பதைச் சூடாமணி நிகண்டு தெரிவிக்கின்றது.

வீரபத்திரருக்குரிய வடிவங்கள் பற்றி சிவாகமங்களும், சிற்ப நூல்களும் குறிப்பிடுகின்றன. நெருப்பு வீசும் சடையும், மூன்று கண்களும், வக்கிரதந்தமும், மணிகலந்த கபால மாலையும், தேள்மாலையும், பாம்பாலான பூணூலும், கட்கம், கேடயம், பாணம், வில் ஆகியவற்றைத் தாங்கிய நான்கு கரங்களும் கணுக்காலில் கிண்கிணியும், காலில் மிதியடியும், முழங்கால்வரையான ஆடையும் அணிந்து வீரபத்திரர் விளங்குகின்றார் என்று உத்தரகாணகம் 11-1-5 குறிப்பிடுகின்றது. கட்கம், கேடயம், பிண்டி, கபாலம் என்ற நான்கினையும் ஏந்தி நிற்கும் நிலையிலும் வீரபத்திரர் வடிவம் அமைக்கப்படும் நான்கு திருக்கரங்களும் மூன்றுகண்களும் கொண்டு விளங்கும் இவ்வடிவத்தின் தலையைச்சுற்றி அக்கினியின் சுவாலை ஒளிபரப்பி பரந்து கிடக்கும் பயங்கரமான நிலையில் தலைமயிர் அமைந்திருக்கும். அத்துடன் பளபளக்கும் பற்களும் பயத்தை உண்டாக்கும் தொடைவரை அணிந்திருக்கும் மூர்த்தியின் ஆடை "ஊருக்கஞ்சும்" என்று அழைக்கப்படும்.

ஸ்ரீ தத்துவ நிதி என்ற சிற்ப நூல் நான்கு கைகளும் மூன்று கண்களும் பயங்கரமான கோரப்பற்களும் உடையவராக வீரபத்திர மூர்த்தியின் உருவத்தைக் குறிப்பிடுகின்றது. இந்நிலையில் இம்மூர்த்தியின் இடது கைகளில் வில்லும் கதையும், வலது கையில் கத்தியும் பாணமும் காணப்படும். கழுத்தில் கபாலமாலை அலங்கரிக்கும் என இந்நூல் வர்ணிக்கின்றது. ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம் என்ற நூல் நின்ற திருக்கோலத்தில் விளங்கும் நிருத்தரூபர், தட்சணரூபர், ருத்ரபாகர், அகோர வீரபத்தரர், அட்டகாச ரூபர், மகாவீரிய ரூபர், தெட்சயெக்கிய ரூபர், அகோர அஸ்திரரூபர் என்ற எட்டு வகையான வீரபத்திர வடிங்களின் அங்க அமைவு பற்றி பின்வரும் விபரங்களைத் தருகின்றது. நான்கு கரங்களுடன் விளங்கும் நிருத்த ரூபரின் வலது கைகளில் கத்தியும் பாணமும், இடது கைகளில் கேடயமும் வில்லும் காணப்படும். இத்தகைய திருக்கோல அமைப்பிலேயே கல்வியங்காட்டிலுள்ள வீரபத்திர ஆலய மூலமுர்த்தியும், எழுந்தருளி மூர்த்தியும் அமைந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆறு கரங்களுடன் விளங்கும் தட்சணரூபரின் வலது கைகளில் மழுவும், கத்தியும், பாணமும்,இடது கைகளில் மானும், கேடயமும், வில்லும் காணப்படும் எட்டுக் கரங்களுடன் விளங்கும் ருத்திர பாகரின் வலது கைளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி என்பனவும் இடது கைகளில் கேடயம், வில், மான், டமருகம் (உடுக்கு) என்பனவும் இருக்கும். பத்து கைகளுடன் விளங்கும் அகோர வீரபத்திரரின் வலது கைகளில் கத்தி,

பாணம், மழு, சூலம், மணி என்பனவும், இடது கைகளில் கேடயம், வில், மான், டமருகம், கபாலம், என்பனவும் காணப்படும். பன்னிரு கரங்களுடன் விளங்கும் அட்டகாசரூபரின் வலது கைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, கோமரம் என்பனவும், இடது கைகளில் கேடயம், வில், மான், டமருகம், பாலம், படமரம் என்பனவும் காணப்படும். பதின்னான்கு கரங்களுடன் விளங்கும் மகாவீரிய ரூபரின் வலது கைளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, கோமரம், முசலம் என்பனவும் இடது கைகளில் கேடயம், வில், மன், டமருகம், கபாலம், படமரம், பாலம் என்பனவும் காணப்படும்.

பதினாறு கரங்களுடன் விளங்கும் தெட்யெக்கிய ரூபரின் வலது கைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, கோமரம், முசலம், கண்டு என்பனவும் இடது கைகளில் கேடயம், வில், மான், டமருகம், கபாலம், படமரம், பிண்டி, பாலம் என்பனவும் காணப்படும். பதினெட்டுக் கரங்களோடு விளங்கும் அகோர அஸ்திச ரூபரின் வலது கைளில்கத்தி, பாணம், மழு, சூலம், மணி, கோமரம், முசலம், கண்டு என்பனவும் இடது கைகளில் கேடயம், வில், மான், டமருகம், கபாலம், படமரம், பிண்டி, பாலம் என்பனவும் காணப்படும்.

## அவதாரக் கோட்பாடு

எங்கே தருமம் அழிந்து அதர்மம் மேலோங்குகிறதோ அங்கே தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் நான் யுகங்கள் தோறும் அவதாரம் செய்வேன் என்கிறார் சிதை நாயகன் கண்ணன். அவதாரம் பற்றிய கருத்து வேறுபாடு சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் உண்டு. ஆனால் ஒரு விடயத்தில் இரு சாரரிடையேயும் ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது தர்மத்தைக் காப்பதிலும், அதர்மத்தை ஒழிப்பதும் தான் அந்த ஒற்றுமை. திருமால் இராமனாக, கண்ணனாக பூவுலகில் அவதாரம் செய்து தனது காத்தல் தொழிலின் பொருட்டு துஷ்ட நிக்கிரகம் செய்கிறார்.

"கருமுகிற் கொழுந்தொழில் காட்டும் மேதியை
திருவுறப் பந்தனள் திறங்கொள் கோசலை"

என்கிறார் கம்பர் கண்ணுடைய அவதாரம் பற்றிக்கூற வந்த ஆழ்வாரும்

"மருள்கொள் செய்கையசுரர்
மங்க வட மதுரையிற் பிறந்தார்"

என்கிறார் அழியாத பரம்பொருள், அழிகின்ற ஊனுடலில் அவதாரம் செய்யவில்லை என்பது சைவசமயிகளுடைய கருத்தாகும். அதனால்தான் விநாயகரோ, முருகனோ, வைரவரோ, வீரபத்திரரோ யோனிவாய்ப்பட்டு பிறக்கவில்லை. முருகனுடைய அவதாரம் பற்றிக் கூறவந்த கச்சியப்பர்

"அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய்
ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதி"

எனக் கூறுவதில் இருந்து சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளிப்பட்ட நெருப்புப் பிழம்புகளே முருகவடிவம் பெற்றதென்கிறார்.

ஆணவம் கொண்ட பிரமனின் தலையை அப்பன் கொய்ய எண்ணியபோது வைரவப் பொருமானை தன் திருவுள்ளத்திலே நினைத்தருளினார். நினைத்த மாத்திரத்தே அவர் அவதாரம் செய்தார்.

"நாயகன் உள்ளத்து மகிழ்வொடு புரிந்தான்
என்ப வைரவக் கடவுள் தன்னை"
எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

## வீரபத்திரரின் தோற்றம்

படைத்தற் கடவுளாகிய பிரம்மதேவர்களின் புதல்வர்களுள் ஒருவன் தக்கன். தக்கப்பிரசாபதி எனவும் அழைக்கப்படுவான். தந்தையே குருவாகக் கொண்டு வேத வேதாந்தங்களைக் கற்றுத்தேர்ந்தார். சங்காரத் தொழிலைக் செய்யும் சிவன் ஏன் சிறந்தவர் என்ற வினா அவனுள்ளத்தில் எழுந்தது. அதைத் தந்தையிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். "சங்காரம் கொடுந்தொழில் போல் தோன்றினாலும் உண்மையில் அதன் விளைவு ஆன்ம சுகம் தந்து அனுக்கிரகித்தலேயாகும். இவ்வனுக்கிரக மூர்த்தியே சிவனாவன். அவனின்றி இறைவனில்லை. அவனை நீ அடைதி" என்ற பிரம்ம தேவர் தக்கன் சிவனை நோக்கி கடுந்தவம் செய்தான். சிவனும் அவனுடைய தவத்தை மெச்சி காட்சி கொடுத்து உனக்கு வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். தக்கனின் புத்திமதி வழிசெல்லாது விதிவழியே சென்றது. அவன் பிரம் விஷ்ணுக்களை விட கூடிய அதிகாரங்களையும் செல்வங்களையும் கேட்டுப் பெற்றுக் கொண்டான். அத்துடன் அவன் திருப்திப்படவில்லை. உலக மாதாவாகிய உமையம்மையே தனக்கு மகளாகப் பிறக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். இதனால் பரம் பொருளான சிவபெருமானே தனக்கு மருகனாக வரலாம் என்ற பேராசையும் அவருள்ளத்தில் இருந்தது சிவன் கேட்ட வரமெல்லாம் தந்து

"நன்னெறி நின்று எண்ணின் நிலைக்கும் இச்சீர்"

என்று கூறி மறைந்து விட்டார். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் முதலியோர் எல்லாம் அடிபணிய தக்கன் அரசோச்சலானான். இவனுக்குச் செல்வம் மட்டுமா கிட்டியது. மேலான செல்வமான உலக மாதாவே மகளாகக் கிடைத்து விட்டார்.

## தக்கன் யாகம்

தக்கனின் ஆணவம், தலைக்கேறிவிட்டது. சிவனே பரம்பொருள் என்பதை மறந்தான். அவனுடைய ஆணவம் எல்லை கடந்து விட்டது. சிவனை நிந்தனை செய்யத் தொடங்கினான். அத்துடன் அவன் நின்று விடவில்லை. சிவனுக்கு அவிர்பாகம் கொடாது வேள்வி ஒன்றைச் செய்யத் தொடங்கினான். இதனைக் கண்ட பார்வதி தன் தகப்பனை நல்வழிப்படுத்த எண்ணி சிவன் தடுத்தும் கேளாமல் தக்கன் யாகத்தைக் காணச் சென்றாள். அவளையும் தக்கன் மதிக்கவில்லை. அவனுடைய சிவநிந்தனையைப் பொறுக்க முடியாமல் தன்னுயிர் நீத்து பின் பர்வதராஜன் மகள் பார்வதியானாள். சிவபெருமான் தக்கன் வேள்வியை அழிக்கத் திருவுளம் கொண்டார். உடனே இரண்டாயிரம் தோள்களும், ஆயிரம் தலைகளும் வளைந்த பற்களும் கொண்ட வீரபத்திரக்கடவுளை தன் நெற்றிக்கண்ணில் இருந்து தோற்றுவித்தார். இறைவன் வீரபத்திரரிடம் தக்கன் ஒரு வேள்வி செய்கின்றான் அதில் எனக்கு அறிவிப்பில்லை. நம்மையும் இகழ்கின்றான். நீ அந்த வேள்விக்குப் போ. அவி உணவு கேள் அவ்வாறு தரவில்லை என்றால் அவன் தலையை அறுத்துவிடு. அவனுடன் இருப்பவர்களைக் கொல். வேள்வியை சின்னா பின்னப்படுத்து என்று கூறினார். உடனே வீரபத்திரர் கோபத்துடன் புறப்பட்டார். அவரது மூச்சுக்காற்றில் இருந்து பூதக்கூட்டங்கள் தோன்றின. அவரது வியர்வையில் இருந்தும், உடல் உறுப்புக்களில் இருந்தும் பூதகணங்கள் பல பிறந்தன. அவைகளுடன் வீரபத்திரர் புறப்பட்டு வேள்விச் சாலையை அடைந்தார். தக்கனின் செருக்கை அடக்கினார். தக்கனுக்கு துணை நின்று வேள்வியில் கலந்த தேவர்களையும் விரட்டியடித்தார். வீரபத்திரருக்குத் துணையாக உமையம்மையார் பத்திரகாளியைத் தோற்றுவித்தார். யாகத்தை இருவரும் சேர்ந்து அழித்து விட்டு யாகசாலையை விட்டு வெளியேறினர். ஆனால் தேவர்கள் செய்த பாவமோ அகன்றபாடில்லை. அதனால் தான் பல்லாயிரம் ஆண்டுகள் அசுரர் கைகளில் சிக்கி துன்பமடையலாயினர். பின்னர் தமது தவறுகளை உணர்ந்து வருந்திய போது முருகப்பெருமான் அவதாரம் செய்து தேவர்களைக் காத்தருளினார்.

## அவதார நோக்கம்

வீரபத்திர் அவதாரம் எமக்கு போதிக்கும் உண்மையை நன்றி மறந்தவர் யாராக இருந்தாலும் அவர்கள் உய்தியடையமாட்டார்கள் என்பதாகும். இறைவன் செய்த நன்றியை மறந்த தக்கனும், அதற்கு உடந்தையாயிருந்த தேவர்களும் தண்டிக்கப்பட்டமை நமக்கெல்லாம் சிறந்த பாடமாக அமைகிறது. செய்த பாவங்களை உணர்ந்து திருந்தும் போது இறைவன் எம்மையெல்லாம் மன்னித்துக் காத்தருள்வான் என்பது இன்னுமோர் உண்மை.

## வீரபத்திரர் வழிபாட்டு நெறிகள்

வீரபத்திரரின் வீரச் செயல்களை அப்பரின் திருத்தாண்டகம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

“எச்சன் நினைத் தலை கொண்டார் பகன் கண் கொண்டார்
இரவிகளில் ஒருவன் பல் இறுத்திக் கொண்டார்
மெச்சன் வியத்திரன் தலையும் வேறாக் கொண்டார்
விறல் அங்கி கரங் கொண்டார் வேள்வி காத்த
உச்ச ந(ய)மன் தாள் அறுத்தார் சந்திரனை உதைத்தார்
உணர்விலாத் தக்கன் தன் வேள்வியெல்லாம்
அச்சமெழ அழித்துக் கொண்டு அருளும் செய்தார்
அடியேனை ஆட்கொண்ட அமலர் தாமே”

மாணிக்க வாசகர் தனது திருவாசகத்தல் வீரபத்திரர் என்ற சொல்லைக் குறிப்பிட்டு அவர்தம் வீரபராக்கிரமங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“பண்பட்ட தில்லைப்பதக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கனெச்சம் இந்துவானால்
விண்பட்ட பூதப்படை விரபத்திரன்
புண்பட்டவர் பாடிப் பூவல்லி கொய்யாயோ”
திருப்பூவல்லி 4

“தக்கனையும் எச்சனையும் தலையஞுத்தத் தேவர்களும்
கொக்கன் வந்தவர் தொலைத்து தானென்னோடீ
கெக்கென வந்தவர் தம்மைத் தொலைத் தருளி அருள் கொடுத்து
கெச்சனுக்கு மிகைத்தலை மற்றருளின் காண் வாழவே”

இப்பாடல் வீரபத்திரருடைய காருண்யத்தை காட்டுவதாக அமைந்துள்ளது.

## வீரபத்திரர் தியான மந்திரம்

இந்துக்கடவுளர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தியான மந்திரம் இருக்கின்றது. வழிபாட்டினைத் தொடங்கும் போது அத்தியான மந்திரத்தைக் கூறுவது மரபாகும். இவ்வகையில் வீரபத்திரரின் தியான மந்திரமாக கீழ்கண்ட சுலோகம் அமைகின்றது.

மரகத மணி நீலம் கின் கிணியுக்கபாதம்
பிரகடி நமுகமீசம் பானுசோமக்னி நேத்திரம்
ஹரிகரமணி கேடம் கிரயக்ஷ மலபக்ரஹஸ்தம்
விதுதர மஹிபூஷம் வீரபத்திரம் நமாமி

இதன் பொருள் பின்வருமாறு விளக்கப்படுகின்றது. மரகத நிறமானவரும் இரு பாதங்களிலும் சத்தமிடும் சலங்கைகளை அணிந்திருப்பவரும் பார்ப்பவர்களுக்குப் பயங்கரத் தோற்றமளிக்கும் முகமுடையவரும், சூரியன், சந்திரன், அக்கினி என்பவர்களைத் தன் மூன்று கண்களாக உள்ளவரும் சந்திரனைச் சூடியிருப்பவரும், பாம்பை அணிகலனாகக் கொண்டவரும், கேடயம், ஜபமாலை என்பவற்றைத் தரித்தவருமாகிய வீரபத்திரரை வணங்குகிறேன்.

## வீரபத்தரருக்கான விரதங்கள்.

இந்துக் கடவுளர்களை விரதமிருந்து வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. கடவுளை வழிபடுவதற்கென அமைந்த கிரியை முறைகளில் விரதக் கிரியை முறைகளும் அடங்கும். வாய்க்கால் வழிச் செல்லும் நீருக்கு "வரம்பு" என்னும் கட்டுக் கோப்பு இருப்பது போல மனிதர்களை ஒழுக்கம் என்ற நெறியைக் கடைப்பிடிக்கவே விரதமுறைகள் அமைந்துள்ளன. தவமும் யோகமும் காட்டிலே அமைதியாகக் கைக்கொள்ள வேண்டியது ஆனால் விரதமோ வீட்டிலிருந்தே கடைப்பிடிக்கக்கூடிய ஒன்றாகும்.

விரதமானது மனம் பொறிவழிப் போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினால் இறைவனை மெய்யன்பொடு வழிபடுதலேயாகும். வீரபத்திரக்குகந்த விரதம் மங்களவார (செவ்வாய்) விரதமாகும். மங்களவார விரதமென்பது செவ்வாய்கிழமை தோறும் வீரபத்திரப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். விரதம் அனுஷ்ஷிக்கும் முறைபற்றி ஆறுமுகநாவலர் தனது இரண்டாம் சைவ வினாவிடையில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். காமம், கோபம், போன்ற குற்றங்கள் எல்லாவற்றையும் பற்றறக்களைதல் வேண்டும். அதாவது நியாய உணர்வை மீறுதல் கூடாது. கோப உணர்ச்சிகளைக் அகற்றுதல் வேண்டும். வைகறையில் துயிலெழுந்து நீராடி சிவசின்னங்களைத் தரித்து, தியானம், செபம், பூசை, ஆலயதரிசனம், பிரதட்சணம், புராண சிரவணம் முதலியவற்றை விஷேஷமாகச் செய்யவேண்டும். திருக்கோயிலில் இயன்ற மட்டும் நெய்விளக்கேற்றுதல் வேண்டும். அபிஷேகத் திரவியங்கள், நைவேத்தியப் பொருட்களைக் கொடுத்துவர வேண்டும். உபவாச விரதமானால் பாரணை தினத்தன்று நித்திய கருமம் முடித்து சுற்றத்தாரோடு அதிகாலையில் பாரணை செய்ய வேண்டும்.

### ஈழத்தில் வீரபத்திர வழிபாடு

இலங்கையைப் பொறுத்தமட்டில் வீரபத்திரரின் ஆலயங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவிலேயே காணப்படுகின்றன. பெரும்பாலும் கிராமங்களில் சிறு தெய்வவழிபாடாகவே காணப்படுகின்றது. ஆயினும் நயினாதீவு, கல்வியங்காடு, கோப்பாய், வட்டுக்கோட்டை, உடுப்பிட்டி, அல்வாய், கச்சாய், அச்சுவேலி,

காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உள்ள வீரபத்திரர் ஆலயங்களில் மகோற்சவவிழா நடத்தப்படுகின்றது. அல்வாயில் ஆதி வீரபத்திரரும், அச்சுவேலியில் வருண வீரபத்திரரும், சாவகச்சேரி கோயில்குடியிருப்பில் ஞான வீரபத்திரரும், வட்டடக் கோட்டையில் வீரபத்திர சிவபெருமானும், மண்டைதீவில் சிவ உக்கிர வீரபத்திரரும், புலோலி, துன்னாலை, உருத்திரபுரம், கச்சாய் ஆகிய இடங்களில் வீரபத்திரர் என்ற பெயரோடு வீரபத்திரர் அருளாட்சி செய்து வருகிறார்.

இவ்வாலயங்களில் அலங்கார உற்சவங்களும் திருக்குளிர்த்தி என்பனவும் நடைபெற்று வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் சேனையூரில் வீரபத்திரர் ஆலயத்தை அங்குள்ள விஸ்வகர்ம குலத்தைச் சேர்ந்தவர்கள் பரிபாலித்து வருகின்றானர். மட்டக்களப்பில் கத்தான்குடி, ஏறாவூர், காரைதீவு, புளியந்தீவு ஆகிய இடங்களில் வீரபத்திரர் ஆலயங்கள் காணப்படுவதில் இருந்து அங்கு வீரபத்திர வழிபாட்டுச் செல்வாக்கு புலப்படுகின்றது. காங்கேசன்துறையில் கோயில் கொண்ட வீரபத்திரர் லிங்கத்தை அணிந்தவராகக் காணப்படுகிறார். இக்கோயில் வீரசைவர்களே பூசை செய்கின்றனர். இதிலிருந்து வீரசைவத்திற்கும் வீரபத்திரருக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது தெளிவாகின்றது.

## பத்திரகாளி அம்மன் தோற்றம்

காளி மகாசக்தியின் பல்வேறு தோற்றங்களின் ஒன்று தேவிவழிபாடு மிகத் தொன்மையானது. காளியின் தோற்றம் பற்றி புராணங்கள் பல்வேறு விதமாகக் கூறுகின்றன. குப்பன், நிசும்பன் என்ற அசுர உடன்பிறப்புக்கள் நான்முகனை நோக்கிப் பல்லாண்டு தவமியற்றி பெண்களைத் தவிர வேறு யாராலும் தங்களுக்கு இறப்பு நேரக்கூடாது என்று வரம் பெற்றனர். நான்முகன் தந்த வரத்தால் நெஞ்சுரமேறி அரசாட்சி அமைத்தனர். தேவர்களுடன் போராடி அவர்களையும் வென்றனர். இரத்தபீசன், தாம்பரன் போன்ற அசுரர்களும் இணைந்து கொண்டனர். இவர்களுள் இரத்தபீசன் அதிசயமான சக்தி உடையவன். இவனுடைய உடலில் இருந்து கொட்டும் ஒவ்வொருதுளி இரத்தமும் பல அசுர வீரர்களைத் தோற்றுவிக்கும் வல்லமை கொண்டிருந்தமையால் இவன் அழிக்கமுடியாத வீரரனாகக் கருதப்பட்டான். இவன் துணையும் கிடைக்கவே கும்பநிசும்பனின் தொல்லை அதிகமாயிற்று. சூரிய, சந்திரர் கூட இவர்கள் ஆணைவழி நடக்க நேரிட்டது. இவ்வாறு துன்புற்ற தேவர்கள் தங்கள் குருவான பிரகஸ்பதியிடம் முறையிட அவர் தேவியை நினைத்துத் தவமியற்றுவதே இதற்கு வழி என்று கூறினர். தேவர்கள் அனைவரும் இமயமலைச் சாரலையடைந்து மகாதேவியை நினைந்துருகி மந்திர உச்சாடனம் செய்து கடுந்தவம் இயற்ற தேவி பிரசன்னமானாள். தேவி தேவர்களின் குறைகேட்க கும்பநிசும்பர்களின் தொல்லைகளை விளக்கித் தங்களைக் காப்பாற்ற வேண்டினர். தேவர்களின் நிலை கண்டு இரங்கிய தேவி கும்ப நிசும்பர்களை அழிக்க தன் உடலில் இருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தார். பராசக்தியின் உடலில் இருந்து தோன்றியதால் கௌசிகை என்றும் கருமை நிறத்தோடு பார்க்க அஞ்சும் கோலத்தில் தோன்றியதால் பத்திரகாளி என்றும் பெயர் பெற்றாள். எனினும் சும்பனின் ஆட்சிக்குட்பட்ட

காடுகளில் தங்கியிருந்த குரலினிமை, அழகு இவற்றைக் தம் காவலர் மூலம் கேள்வியுற்ற கும்ப நிசும்பன் காளியை மணக்க விரும்பித் தூதனுப்ப காளி தன்னைப் போரில் வென்றால் அவனை மணப்பதாகக் கூற கும்ப நிசும்பனும் அதை ஏற்றுப் படை அனுப்ப படைத்தலைவர்களை அழைத்தான். இரத்த பீசனின் இரத்தம்கீழே விழுமுன்னே காளி அதை உறிஞ்சிக் குடித்தமையால் புது அரக்கர்கள் தோன்றுவது இயலாது போனதுடன் இரத்த பீசனும் விழுந்து மாண்டான். சண்டன், முண்டன் என்ற இரு படைத்தலைவர்களின் தலைகளை அறுத்து அவர்தம் குருதியைக் குடித்தமையால் காளி சாமுண்டி ஆனாள். பின்னர் போர்க்களம் புகுந்த கும்பநிசும்பர் இருவரும் காளியால் தாக்குண்டு மடிந்து போனார்கள் என்று தேவி பாகவதம் கூறுகின்றது.

இப்படித் தோன்றிய களியைத்தான் சிவன் ஊர்த்துவத் தாண்டவம் மூலம் செருக்கையடக்கி கோபத்தை தணித்ததாக வேறு ஒரு புராணம் கூறுகின்றது. தில்லை மான்மியக் கதையில் தில்லையில் இருந்த காளி மிகவும் கொடுஞ் செயல்களைச் செய்ததாகவும் சிவன் காளியுடன் நடனமாடி அவளை வென்று எல்லைக் காளியாக்கியதாவும் அத்தெய்வம் ஒரு தீர்த்தத்தில் மூழ்கிக் கோரவடிவம் நீங்கிச் சாந்த வடிவம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.






மனித வாழ்வில் கிரகங்களால் ஏற்படும் துன்பங்களைப் போக்கும் வண்ணம் சாந்திகள் செய்யப்படும். இது ஒவ்வொருவரதும் தன்னலத்திற்காகச் செய்யப்படுவது. தான் வாழவேண்டும், தன் குடும்பம் என்னும் சுயநலத்திற்காக செய்யப்படும் சாந்திகளும் உண்டு. ஆனால் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை ஆலயங்களில் ஊர் மக்களின் நலம் நல்வாழ்வும் வேண்டிச் செய்யப்படுவது பெருஞ்சாந்தியாகும். இதனையே மஹாகும்பாபிஷேகம் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. பன்னிரண்டாண்டு கால இடைவெளியில் தெரிந்தும் தெரியாமலும் விடப்படும் வழிபாட்டு குறை, மந்திரக்குறை. இன்னும் ஆலயங்களில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கி இறைருள் வேண்டிச் செய்யப்படுவதாகும். உலக நன்மைக்காக இறைவனின் அருள் ஒளியை மேலும் பிரகாசிக்கச் செய்வதே குடமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தியின் நோக்கமாகும்.

கும்பாபிஷேகம் ஆவர்த்தனம், அனாவர்தனம், புனராவர்த்தனம், அந்தரிகம் என நான்கு வகைப்படும். பெருமழை, காற்று, பூகம்பம் போன்ற இயற்கை அழிவுகளால் சிதைந்து கிடக்கும் பழைய கோயில்களில் உள்ள மூர்த்திகளை எழுந்தருளச் செய்தல் ஆவர்த்தனம் எனப்படும். கோயில் இல்லாத ஊரில் ஆகம விதிப்படி புதிய கோயில்கள் கட்டி அங்கே மூர்த்திகளைத் ஸ்தாபிப்பது அனாவர்த்தனம் எனப்படும். பழுதடைந்த கோயில்களை புதுப்பித்து வர்ணம் பூசிப் பெருஞ்சாந்தி செய்தல் புனராவர்த்தனம் எனப்படும். கோயிலுக்குள் யாராவது இறந்தால் செய்யப்படும் பிராயச்சித்தம் அந்தரிகம் எனப்படும்.

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்திலும் ஆகம விதிப்படியான கும்பாபிஷேகங்கள் காலத்திற்கு காலம் நடைபெற்று வந்துள்ளன. கடந்த காலங்களில் அதாவது ஆலயம் நிர்மாணிக்கப்பட்ட காலம் தொடக்கம் நடைபெற்று வந்த கும்பாபிஷேகங்களின் முழுவிபரங்கள் தெரியக்கூடியதாக இல்லை.

மனித வாழ்வில் கிரகங்களால் ஏற்படும் துன்பங்களைப் போக்கும் வண்ணம் சாந்திகள் செய்யப்படும். இது ஒவ்வொருவரதும் தன்னலத்திற்காகச் செய்யப்படுவது. தான் வாழவேண்டும், தன் குடும்பம் என்னும் சுயநலத்திற்காக செய்யப்படும் சாந்திகளும் உண்டு. ஆனால் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை ஆலயங்களில் ஊர் மக்களின் நலம் நல்வாழ்வும் வேண்டிச் செய்யப்படுவது பெருஞ்சாந்தியாகும். இதனையே மஹாகும்பாபிஷேகம் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. பன்னிரண்டாண்டு கால இடைவெளியில் தெரிந்தும் தெரியாமலும் விடப்படும் வழிபாட்டு குறை, மந்திரக்குறை. இன்னும் ஆலயங்களில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கி இறைருள் வேண்டிச் செய்யப்படுவதாகும். உலக நன்மைக்காக இறைவனின் அருள் ஒளியை மேலும் பிரகாசிக்கச் செய்வதே குடமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தியின் நோக்கமாகும்.

கும்பாபிஷேகம் ஆவர்த்தனம், அனாவர்தனம், புனராவர்த்தனம், அந்தரிகம் என நான்கு வகைப்படும். பெருமழை, காற்று. பூகம்பம் போன்ற இயற்கை அழிவுகளால் சிதைந்து கிடக்கும் பழைய கோயில்களில் உள்ள மூர்த்திகளை எழுந்தருளச் செய்தல் ஆவர்த்தனம் எனப்படும். கோயில் இல்லாத ஊரில் ஆகம விதிப்படி புதிய கோயில்கள் கட்டி அங்கே மூர்த்திகளைத் ஸ்தாபிப்பது அனாவர்த்தனம் எனப்படும். பழுதடைந்த கோயில்களை புதுப்பித்து வர்ணம் பூசிப் பெருஞ்சாந்தி செய்தல் புனராவர்த்தனம் எனப்படும். கோயிலுக்குள் யாராவது இறந்தால் செய்யப்படும் பிராயச்சித்தம் அந்தரிகம் எனப்படும்.


கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்திலும் ஆகம விதிப்படியான கும்பாபிஷேகங்கள் காலத்திற்கு காலம் நடைபெற்று வந்துள்ளன. கடந்த காலங்களில் அதாவது ஆலயம் நிர்மாணிக்கப்பட்ட காலம் தொடக்கம் நடைபெற்று வந்த கும்பாபிஷேகங்களின் முழுவிபரங்கள் தெரியக்கூடியதாக இல்லை.

கடந்த 50 ஆண்டுகளில் 7 கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. 3 புனராவர்த்தன கும்பாபிஷேகம் மற்றும் மூன்று பரிவாரமூர்த்திகளுக்கும் நடைபெற்று பிரதிஷ்டா கும்பாபிஷேகங்களும் ஆகும். 7ஆவது இராஜகோபுர கும்பாபிஷேகமாகும். 1990ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 3ஆம் நாள் நயினை பரமேஸ்வரக் குருக்களின் நல்லாசியுடனும் அவருக்கு உதவியாக வரதராசக்குருக்களின் நல்லாசியுடனும் அவருக்கு உதவியாக வரதராசக்குருக்களும் அவரது வாரிசுகளும் கிரியைகளில் உள்ளன்போடு ஈடுபட்டு ஆலய வழிபாட்டின் முக்கிய அம்சமான மஹா கும்பாபிஷேகத்தை அடியவர்களும் ஆலயத்தைச் சூழவுள்ள கிராம மக்களும் நலமாக வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு நிகழ்த்திமுடித்தனர்.

ஏழாவதாக இராஜகோபுரம் அழகுறச் சிற்பவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு நடத்தப்பட்ட கும்பாபிஷேகம் இது 01.02.2013 அன்று சிறப்பாக நடைபெற்றது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க அமைக்கப்பட்ட கோபுரம் உயர்ந்தோங்கி அடியார்கள் பக்தியுடன் பரசவசத்தை தோற்றுவிப்பதாகும்.

## ஆலயத்தின் தற்போதைய உட்புற வெளிப்புற தோற்றப்பாடுகள்...













கும்பாபிஷேகத்தை முன்னிட்டு
அமைக்கப்பட்ட
அன்னதான மண்டபமும்,
கலாச்சார மண்டபமும்




# வீரபத்திரர் போற்றித் திருவகவல்

## விநாயகர் காப்பு

ஓங்கார ரூபமாய் ஞுவாதொலிக்கின்ற
ஐங்கரனே ஆனைமுகா எந்நாளும் - சங்கரனார்
போற்றி நெற்றிச் சுடர் வீரா பத்திரரைப்
போற்றித்துதிக்க அருள்.

ஓங்காரத்துட் பொருளானாய் போற்றி
ஆகங்காரமடக்கிய அரசே போற்றி
தக்கன் வேள்வி தகர்த்தார் போற்றி
அவர்ந்தவர்கருளும் அப்பா போற்றி
அஞ்சிகர் கபயம் அருள்வாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
தந்தையும் தாயுமானாய் போற்றி
இடரைக்களையும் எந்தாய் போற்றி
வாழ்வெ போற்றியெம் வைப்பே போற்றி
உரையுணர்விறந்த ஒருவனே போற்றி
ஓவாது ஒலிக்கும் ஒலியெ போற்றி
ஓசை ஒளியெலாம் ஆனாய் போற்றி
எங்கும் நிறைந்தாய் எந்தையே போற்றி
காளியோடு நடனமாடினாய் போற்றி
ஏரார் கல்வியம் பதியின் மேவும்
ஐயனே போற்றி அப்பனே போற்றி
ஒளிவளர் விளக்கின் ஒருவனே போற்றி
ஞானச் சுடரொளியாய் நின்றாய் போற்றி
காளிபோற்றும் காந்தா போற்றி
குவலயம் காக்கும் குருவே போற்றி
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
சர்வலோக தயாபரா போற்றி
வேண்டுவார் வேண்டுவன ஈவாய் போற்றி
கொடுமை செய்பவரை அழிப்பாய் போற்றி
சிவநிந்தை சொல்வாரை துடைப்பாய் போற்றி
கருணையின் வடிவாய் காப்பாய் போற்றி

சிவமேயாகித் திகழ்வாய் போற்றி
சூரரையழிக்கும் வீரனே போற்றி
செந்தழல் மேனித்தேவனே போற்றி
சேர்தாரைக் காக்கும் தேவனே போற்றி
சௌபாக்கிய மருளும் தந்தையே போற்றி
சர்வலோக தயாபரா போற்றிபோற்றி
தயொயாகி வளர்ந்தனை போற்றி
தீயாரை யொழிக்கும் திருவே போற்றி
அம்மை மறுமைத் துணையாய் போற்றி
துட்டரை அழிக்கும் தூயனே போற்றி
தெவிட்டாத ஞானத் தெளிவே போற்றி
பூவில் மணமாய்  பொலிவாய் போற்றி
தேவனே போற்றி தேவனாதியே போற்றி
வீரபத்திரரை சேர் விமலா போற்றி
தோன்றாத் துணையாய் நின்றாய் போற்றி
நடனமாடும் நர்த்தன போற்றி
நாதிக்குதவும் நம்பா போற்றி
நிகர் நேரில்லா ஒரவனே போற்றி
வேதமந்திர ரூபா போற்றி
முக்தா போற்றி எம்முதல்வா போற்றி
நீசரை யழிக்கும் ஈசனே போற்றி
சென்னுநெக்குருகும் அடியார்கெல்லாம்
நேர் நின்றருளும் நிமலா போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
நோயற்ற வாழ்வே தருவாய் போற்றி
பத்திரகாளியின் வித்தகா போற்றி
பிறவி வேரையறுப்பாய் போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
அழிவிலா ஆனந்தவரரிதி போற்றி
தளர்ந்தேனடியேன் தமியேன் போற்றி
பொன்னும் பொருளும் தருவாய் போற்றி
போராயிரமுடைய பெம்மான் போற்றி
வீணரையழிக்கும் விறலியே போற்றி
அரவமும் உருவமும் ஆனாய் போற்றி
சிந்தனைக் குரிய செல்வா போற்றி
மக்கட் கருள் செய் மாதவா போற்றி
மாய வினைகள் மாய்ப்பாய் போற்றி
மீளாத் துயரைப் போக்குவாய் போற்றி
முல்லையங் கண்ணி முடியாய் போற்றி



# ஆலய மூர்த்திகள் பிரதிஷ்டை, எண்ணொய்காப்பு, மற்றும் கும்பாபிஷேக ஆரம்பக் கிரிஜைகளும்
















# கும்பாபிஷேக ஆரம்பக் கிரிஜைகள்




மண்துளங்காடல் மகிழந்தாய் போற்றி
வெஞ்சின வெள்ளேறூர்த்தியாய் போற்றி
கல்லாதக் காட்சி கரியாய் போற்றி
கற்றார் இரும்பை களைவாய் போற்றி
மேன்மை கொள் சைவர் சிவனே போற்றி
சிந்தை நின்ற வீரபத்திரா போற்றி
விண்ணவர் போற்றும் வித்தகா போற்றி
வெள்விடையேறி எவன் குடை நிழற்றி
வேள்வியழித்த வீறுடன் வந்தாய்
வையம் காத்து வான்புகழ் கொண்ட
ஐயனே போற்றி அமலனே போற்றி
கழலடைந்தார் போற்றும் கழலே போற்றி
உள்ளுவார் உள்ளத்தே உறைவாய் போற்றி
நோக்கரிய திருமேனியுடையாய் போற்றி
கல்வியம்பதிசேர் கறுப்பையா வளவில்
தொல்பொருள் கல்லில் தோன்றிய முதல்வா
பூவரசென்னும் புதுமைசேர் மரமும்
வேர்கனியீன்ற தீங்கனிப் பலாவும்
அற்புத முருளிய தற்பரா போற்றி
நற்றவம் செய்த மாதர் நன்மகன்
வீரகத்தியார் வியப்புறத் தோற்றம்
சீர்பெறக்காட்டி சிந்தை மகிழந்து
கோயில் கொண்டருளிய வீரா போற்றி
தம்பையாக்குருக்கள் தப்பமே பூசை செய்
கல்வியம்பதியுறை கடவுளே போற்றி
தொண்ணூற்றொன்று பிரசோற்புத்தியில்
துவசம் ஏற்றும் தூய நல்மகோற்சவம்
கண்டோர்க்கருள் கடவுளே போற்றி
ஆனைமுகனும் அருள்புரி கௌரியும்
மாயவன் தன்னுடன் மருகோன் முருகனும்
கல்லாலின் கீழ் நல்லவர்கருளும்
தட்சணா மூர்த்தியும் சார்லிங்கோற்பவரும்
துர்க்கா தேவியும் தூயநல் பைரவரும்
சூரிய சந்திரன் சூழ்பரிவாரமாய்
நவக்கரக கோட்டமும் நன்றாயமைந்திட
பத்திர காளியோடுத்தல முறைந்து
எல்லாச் சித்தியும் அருள்வாய் போற்றி
நல்லருள் புரிந்து நானிலம் போற்ற
போற்றி போற்றி சயசய போற்றி



# கல்வியங்காடு
# ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமாள் மீது பாடிய திருவூஞ்சல்.

**காப்பு**

திருவாரும் ஈழத்தின் யாழ்ப்பாணத்தில்
சிறந்திலங்கு கல்வியங்காடதனில் மேவிய
பொருவாகும் சொலற்கரிய பொலஞ் செய் கோயில்
பொலிவுடனே கொண்டருளும் பொற்பார் தேவாம்
திரு வீர பத்திரர் முதன்பினாலே
திருவூஞ்சல் இசைபாடத் தகழுமுக்கண்
மருவாரும் ஐங்கரத்து மணியே தும்பி
மாமகத்து விநாயகனெ காப்பதாமே

**நூல்**

சீராரும் வேதங்கள் கால்களாகத்
கினமு மொழியாகமங்கள் விட்டமாகத்
பாராரும் பல கலைகள் வடங்களாகப்
பகர்வரிய பிரணவமே பலகையாகக்
பேராரும் மந்திரங்கள் பலமதாகக்
பெருமையொடு கல்வியங்காட்டில் மேவும்
சீராரும் அடியர்குளாம் வடந்தொட்டாட்டத்
திகழ்வீரபத்திரரரே ஆடீருஞ்சல்

பார்புகழும் பிரமனது மகளாய்த் தோன்றிப்
பரம் பொருளை மிகவிகழ்ந்து பரிவுநீங்கிச்
சீர் படைத்த உமையவளைச் சிறுமை செய்து
தீ நெறியில் தக்கன் செய் மகஞ்சிதைக்க
பேர் படைத்த உருத் தாங்கிக் காளியோடு
பெருசினம் அழல் கால உருத்துவந்த
ஏர் படைத்த கல்வியங்காட்டில் மேவும்
எழில் வீரபத்திரரேயாடீருஞ்சல்

பேர் பூத்த உலகமெலாம் தூண்களாகப்
பிறை பூத்த சிவனுலகம் விட்டமாகச்
சீர்பூத்த நான் மறைகளை வடங்களாகத்



செயல் பூத்த ஆகமநற்பலகையாகப்
பயன்பூத்த மலர்பொலிந்த ஊஞ்சலேறித்
தார் பூத்த கல்வியங்காட்டிலே மேவும்
தகு வீர பத்திரரே ஆடீரூஞ்சல்

மாமேரு மலை நடுங்க மந்த அண்ட
மறை பலவும் நிலை குலைந்து மாறிவீழத்
தாமேவு கோள்களோடு நாங்கள் தாமும்
தரணிதவத்துள்ள பொருள் யாவும் மாறதப்
பூமேவு அயனொடு மால் புலவர்கோஷம்
புண்ணியவுன் திரு விளையாட்டறியா தோட
சேமேவு சிவனருளால் தோன்றுந் தேவே
சிவவீர பத்திரரே ஆடீரூஞ்சல்

சிவன் பெருமை அறியாது தக்கன் செய்யும்
சிறுவேள்வி காணவந்தார் சிதறியோடத்
நவமான குண்டஞ் சேர் சாலையெல்லாம்
நலஞ்சிதறி ப் பூதூளியாகிப் போக
தவமுறு சீர் முனிவரதும் தேவர் தாமும்
தகு சந்திர சூரியரும் புறகிட்டோட
சிவனையிகழ் யாகத்தைச் சிதைத்தகோவே
தரு வீரபத்திரரே ஆடீரூஞ்சல்

பன்முருவும் அடியார்கள் பாடி ஏத்தப்
பதினான்னு புவனங்கள் கூடி வாழ்த்த
வண்மை மிகு சுரமகளீர் கவரிவீச
வந்தனை செய் நாரதரும யாழை மீட்ட
வின்மகவு காந்தருவர் கீதம் பாட
மேவிய மத்தளத்தின் தாளம் போட
தன்மையுறு கல்வியங் காடுறையுந் தேவே
தரு வீரபத்திரரே ஆடீரூஞ்சல்

அத்தனுமை அசலமிசை நின்று நோக்க
அரிபிரயர் இந்திர்கள் வந்து பார்க்க
சித்தரொடு சேய்... அன்பினொக்கப்
சிவகணங்கள் மென்மலரை உவந்து தூவ
சுத்தநெறி அந்தணர் தம் சுருதி கேட்க
தூத்துபியும் மத்தளமும் துடியுமார்ப்ப
வித்தகர் வாழ் கல்வியங்காட்டிலே வாழும்
தரு வீரபத்திரரே ஆடீரூஞ்சல்



பொன்னளக முடியின்மணி பொலிவினாடை
புதுமலரின் எழுவிரையும் பரவிவிச
வண்ண மருங்கிசையினர்கள் அருவியோட
மன்றுமறை அந்தணர் மெய்யழகள் சேர
மனுமறையும் நெறியறமும் உலகு போற்
மின்னு மெழிற் கல்வியங்காடுறைந்து வாழும்
தரு வீரபத்திரரே ஆடீரூஞ்சல்

அம்புலியும் செங்கதிரும் கனிகை தாங்க
அரிபிரமர் ஆர்வமுடன் கவரிவீச
உம்பரிடை ஒண்மணியாந்தீபந் தூங்க
உகந்த விளந்தென்றனது தூபம் வாங்க
இம்பரிடை வளருமொளி இருளைப் போக்க
இயல் பத்திர காளியவள் இருளைப் போக்க
இயல்பத்திர காளியவள் பாங்கினோங்க
நம்புமடியார் துயரைப் போக்குந்தேவே
நல்வீரபத்திரரே ஆடிரூஞ்சல்

உலகம் அறநெறிநிற்க உதித்த தேவே
உயர் கருணை ஒளி நிலவும் ஒப்புலி தேவே
பலவடியார் துதிசெய்ய அருள் செய் தேவே
பாங்கினொடு மகிமித்த பரமதேவே
வலம் பெற்ற காளியவள் இடத்தில் மேவ
வரமருளி மாநிலத்தோர் வாழவேண்டித்
சிலபகலும் நீங்காது உறையுந்தேவே
ஸ்ரீ வீரபத்திரரே ஆடீரூஞ்சல்
வேதமுடன் ஆகமங்கள் வாழி வாழி
விரிவுடைய கலைஞானம் விரிந்து வாழி
போதமிகு ஞான நெறி வாழிவாழி
பொலிவுடனே அடியார்கள் சிறந்து வாழி
ஓதரிய ஐந்தெழுத்தும் உயர்ந்து வாழி
உயர்கண்டி திருநீறு வாழிவாழி
சீதம்மிகு மழைசெங்கோல் சிறந்து வாழி
ஸ்ரீ வீரபத்திரரே வாழிவாழி



**வீரபத்திரர் புராணம்**

அடைந்தவி உண்டிடும் அமரர்யாவரும்
முடிந்திட வெருளிய முனியவர் வேதியர்
உடைந்திட மாகம் ஓடியத்தக்கனைத்
தடிந்திடுசேவகம் சரணம் போற்றுவோம்

**கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமான் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் சண்முகப் பெருமான் மீது பாடிய திருப் பொன்னூஞ்சல்**

**காப்பு**

சீராரும் கல்வியங்காடதனில் கோயில்
திகழவருஞ் ஸ்ரீ வீர பத்திரரோடு
ஏராரும் ஸ்ரீ பத்திரகாளி போன்ற
எழில் திகழப் பக்கத்தே இனிது மேவி
பேராரும் சூரனுடன் கிழத்துத் தேவர்
போற்றவரும் ஆறுமுகன் மேல் ஊஞ்சல் பாட
காராரும் கரிமுகத்து மணியே ஐந்து
கரத்துடைய கணபதியே காப்பதாமே

மன்றில் நடமாடுகின்ற மகிபன் தன்பால்
வானவர்கள் இரங்கி நின்று வழுத்துங்காலை
கன்னு கனல் விழியிற்றீப் பொறியாய்த் தோன்றி
கரதரி சரவணப்பூம் பொய்கை தன்னில்
ஒன்றாக ஆறுமுகன் கந்தனென்றே
உருத்தாங்கி உம்பர் தமைக்காத்ததேவே
சென்று தொழும் அடியர்திரு வீரபத்திரனார்
சிந்தை மகிழ் சண்முகரே ஆடீரூஞ்சல்



வாசுகி கார்க் கோடனுடன் சகபாலன்
பதுமனெனும் நாகமலை தூண்களாக
நேசு நிறைகுளிகனவன் பெருகாணாக
திருவிளங்கும் அனந்த துயம்பலகையாக
பாசுரர்கள் போற்று கலை வாணி கேள்வன்
பண்புடனே நன்கமைத்த ஊஞ்சல் வைகி
பூசுரர்கள் தொழுங் கோயில் கல்வியங்காட்டில்
புண்ணிய சண்முகனே ஆடீரூஞ்சல்

வெங்கதிருந் தண் கதிரும் கவிகை தாங்க
வெற்றி நிறை நிருதியாலே வட்டம் பற்ற

பொங்குதிரை காவிரியைப் புவியிற் கொண்ட
புண்ணியனாம் இந்திரன் காளாஞ்சி ஏந்தத்
தங்கு புகழ் நிதிக்கறைவன் கடம்பை ஏந்தத்
தாரணி யோர் புகழ் வருணர் சாமரங்கள் காட்டில்
புகழ் வளரும் ஆறுமுகனே ஆடீரூஞ்சல்

கண்ண பிரான் செய்த தவப்பயனில் வந்த
கன்னியராம் வள்ளி தெய்வயானை சூழ
வண்ணமயில் வாகனமேல் வடிவேலேந்தி
வருமுருகா உனது பதம் அபயமென்றே
எண்ணரிய பக்தர் குழாம் இரங்கி ஏத்த
எழில் திகழும் கல்வியங் காட்டினிலே மேவி
வண்ண நிறை பொன்னூஞ்சல் மருவியாடும்
மலை மகள் தன் திருமகனே யாடீரூஞ்சல்.

தேனமர் பூங்பலிலுறை தேவரேத்த
தேனிசை தும்புரு நாரதங்கள் பாட
ஈனமில்லா முனிவர் தாம் இரங்கி நிற்ப
எழில் நிறையும் மாதர்குழாம் இறைஞ்சி ஏத்த
வானமுயர் சோலை திகழ் வடபால் ஈழ
வளம் பெருகும் கல்வியங்காட்டினிலே வாழும்
கானவர் கோன் திருமகளை வதுவை செய்தோய்
கண்ணுதலான் திருமகனே ஆடீரூஞ்சல்

கார் நிறையும் விண்ணவர் பூமாரி பெய்ய
சன்மார்க்க வைநெறி தழைத்து ஓங்க
ஏர் நிறையும் கந்தருவர் கீதம் பாட
எழிலாரும் மாமகளிர்நடனமாட
பார்நிறையும் மறைவாணர் வேதமோத
பந்த மெலாத் தொண்டர்தமைப் பற்றாதோட
கார் உலவும் நலத்திழேக் கவினார் கோவில்
கல்வியங்காட்டுறை முருகா ஆடீரூஞ்சல்

பொன்னறக முடியின் மணி பொலி விகாட
புது மலரின் எழு விரையும் பரவி வீச
வண்ண மருங் கிசையினர்கள் சுருதிபாட
வருமடியார் இருவிழியும் அருவியோட
மன்னு மறை அந்தனர் மெய் புளகஞ்செர
மின்னு மெழிற் கல்வியங்காட்டுறைந்து வாழும்
வித்தனே சண்முகனே ஆடிடீரூஞ்சல்.



பார் ஏத்தும் ஏர்பிடிக்கும் உழவாரர்ப்ப
பங்கயங்கள் நிறை தடத்துக் கயல்கள் துள்ளி
தார் ஏற்றும் தருவினிறால் கிழிக்கச் செய்தேன்
தண்ணளவி வெள்ள மென்றுந் தணந்து போந்து
பேராற்றும் வளர்த்தினுயர் கல்வியங்காட்டில்
பெருமை பெறு வீரபத்திரர் கோவில்
பேரா்றல் படைத்துடைய பொருளே எங்கள்
புண்ணியனே ஆறுமுகனே ஆடீரூஞ்சல்

ஆறணிந்தோன் மகனே ஆடீரூஞ்சல்
அருள் விளங்கும் ஆறுமுகனே ஆடீரூஞ்சல்
நீறணிந்து தொழுமடியார் துயரம் நீக்கும்
நிர்மலனே சண்முகனே ஆடீரூஞ்சல்
கூறலிய குஞ்சரத்திற் கிளைய கோவே
குறமகள் தன் மணவாளா ஆடீரூஞ்சல்
மாறரிய திருவினுயர் கல்வியங்காட்டு
மக்களுக்கோர் தனிமுதலே ஆடீரூஞ்சல்

வேதமுடன் ஆகமங்கள் வாழி வாழி
விரிவுடைய கலைஞானம் சிறந்து வாழி
போதமிகு ஞானநெறி வாழி வாழி
பொலிவுடனே அடியவர்கள் சிறந்து வாழி
ஓதரிய ஐந்தெழுத்து உயர்ந்து வாழி
சீதமிகு மழை செங்கோல் வாழி வாழி
சிவனருளாம் சண்முகரே வாழி வாழி

**புராணம்**

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்கச் செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியாரெல்லாம்.



## மங்களம்

அத்திமுகன், ஆதிசிவன் அம்பிக்கைக்கு மங்களம்
ஆறுமுகன் வில்லிகாடு ஆரியவர்க்கு மங்களம்
சுத்தவானம் சூரியர்க்குச் சோமனுக்கும் மங்கள்
அழுந்தவ யோகியர்க்கும் சோதியர்க்கும் மங்களம்
மெத்த வேழ் புவனங்காக்கும் மேழியர்க்கு மங்களம்
மேலாந் திருநீறு திகழ் மேனியர்க்கு மங்களம்
சித்தியுமாய்ச் சத்தியமாய் நினைப்பவர்க்கு மங்களம்
பத்திரகாளி சமேத வீரபத்திரக்கு மங்களம்
உலகர் தொழும் சிவனார்க்கு ஜெய மங்களம்
உவமையாகும் பார்வதிக்குச் சுபமங்களம்
ஐந்து கரத்தையனுக்கு மங்களம்
ஆறுமுகத்தையனுக்கு மங்களம்
எந்தமையின் பைரவருக்கு மங்களம்
எமது வீரபத்திரர்க்கு மங்களம்
சுந்தரமார் பத்திரைக்கு முங்களம்
தோகையராம் மூர்த்தியற்கு மங்களம்
முத்து நல்மூலவர்க்கு மங்களம்
முதிய பல தேவர்களுக்கு மங்களம்
ஜெய மங்களப் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்

# எங்கள் ஊரும் வீரத்திரர் ஆலயமும்

**இ. இராஜேஸ்வரன்**
ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்,
வடக்குமாகாணம்.
கல்வியங்காடு.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். இவை மகாவாக்கியங்கள் ஆன்மாக்களை ஈடேற்றுவதற்கு சிறந்த இடம் ஆலயங்களே. அனைத்து உயிரினங்களைப் படைத்தவனும் வேண்டு வார் வேண்டுவதை ஈந்தருளுபவருமாகிய இறைவன் வாழும் உறைவிடமும் ஆலயங்களே. இந்த உன்மையை அனைத்துச் சமயத்தவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். கோ+இல்- கோவில் என்றாகியது. கோ தன்னிகரில்லாத்தலைவன் இல் வீடு தன்னிகரில்லாத்தலைனாகிய இறைவன் வாழும் வீடு கோவில் என்றும் பொருள் கொள்ளலாம்.

சம்மந்தர் மூன்று வயதினிலே எம் பெருமானைத் தோடுடைய செவியனாகவும், இடபவாகனத்திலே அம்மை அப்பராகக் கண்டதுவும் உமையம்மையின் திருமுலைப் பாலை அருந்தி திருஞான சம்பந்தராகி தோடுடைய செவியன் என்ற தேவராத்தைப் பாடிய சீர்காளியும், சைவ சமயத்தில் இருந்து சமண சமணசமயத்திற்கு மாறிய நாவுக்கரசரை சூல நோய் கொடுத்து தண்டித்து மறுபடியும் திருநீறு அணிந்துசைவனாக மாறிய வீரட்டானத்துறையும், திருமணக்கோலம் பூண்டு மாப்பிளையாய் மணவறையில் இருந்த சுந்தரை நீ என் அடிமை, வா என்னோடு என்று ஒலை காட்டித் தடுத்தாட்கொண்டு வழக்காடு மன்றம் வரை அழைத்துச் சென்ற திருவெண்ணை நல்லூரும் ஆலயங்களே எனவே ஆலயங்களில் இறைவன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு வேறுசான்றுகள் தேவையில்லை. எனவே இந்துக்கள் இறைவன் வாழும் இடம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஆல்ய வழிபாடுகளில் ஈடுபடுவதுடன் ஆலயங்களை புனித இடமாகப்பராமரித்தும் வருகின்றனர். கோவில்களைக் கண்டவுடன் தலைவணங்காதவன் ஒரு இந்துவாக இருக்க முடியாது.

எமது ஆலயங்கள் அனைத்தும் கலை வளர்த்த இடங்களாகவும் வேலை வழங்கும் நிறுவனங்களாகவும், தீர்ப்பு வழங்கும் நீதி மன்றங்களாகவும், உணவளிக்கும்

சத்திரங்களாகவும் சமூக ஒற்றுமையை கட்டி எழுப்பும் இடங்களாகவும் திகழ்கின்றன. எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை அழியாத வகையில் பேணிப்பாதுகாக்கும் இடங்களும் ஆலயங்களே. உலகிலே எங்கும் காணமுடியாத அழகிய சிற்பங்களும் ஓவியங்களும் இந்துக்களின் ஆலயங்களில் காணலாம். தொழில் நுட்ப வளர்ச்சியடையாத காலத்தில் வாழ்ந்த எமது சிற்பிகளதும் ஓவியக்கலைஞர்களதும் தொழில் நுட்ப வல்லுநர்களும் வாயடைத்து நிற்கின்றனர்.

சதுர்வேதப்பிராமணர்கள், ஓதுவார்கள், மங்கல வாத்தியக் கலைஞர்கள், தேவதாசிகள் என்று சொல்லப்படும் நாட்டியக்கலைஞர்களும், பூமாலைகளை அழகுறப்புனைந்து கடவுளை அலங்கரிக்கும் சாத்துப்படிகளை செய்யும் பண்டாரங்களும் சித்திர, சிற்ப, கட்டிடக்கலைஞர்களும் கட்ட ஆலயங்களைச் சார்ந்து வாழ்ந்தனர். இன்னும் திக்கற்றவர்களும் ஏழை எளியவர்களும் கூட ஆலயங்களை அண்டி வாழ்கின்றார்கள்.

ஒரு நாட்டில் நல்லாட்சி நடைபெறுகின்றது என்பதை அங்கு கட்டப்பட்டுள்ள ஆலயங்களைக் கொண்டு தீர்மானிக்கமுடியும். தமிழ் மன்னர்கள் நல்லாட்சி புரிந்த நாடுகளில் எல்லாம் வானுயர்ந்த கோபுரங்களுயுடன் கூடிய ஆலயங்கள் தெப்பக்குளங்கள் ஆகியன இன்னும் புதுப் பொலிவுடன் திகழ்கின்றன. மன்னர்கள் தமது குடி மக்கள் ஆன்மீக வாழ்வு வாழ்ந்து ஆன்ம ஈடேற்றம் பெற வேண்டும் என்ற நல்ல நோக்குடன் பொன்னையும் பொருளையும் கோடிக்கணக்கான பணத்தையும் செலவிட்டு ஆலயத்திருப்பணிகளை மேற்கொண்டிருந்தார்கள்.

எமது ஊரில் வாழ்ந்த முன்னோர்களின் இறைபத்தியாலும் தூரநோக்காலும் இப்போது வாழ்கின்ற மக்களின் தவப்பயனாலும் பத்ரகாளிசமேத வீரபத்திரப் பெருமான் ஆலயம் எமக்குக் கிடைத்துள்ளது. இவரே எங்கள் ஊர் மக்களின் குல தெய்வம். எங்கள் வீரபத்திரர் மிக சக்திவாய்ந்தவர். தம்மை நாடி வரும் பத்தர்களை காத்து அருளுகின்றார். ஏனைய மக்களுக்கும் அருள் பாலிப்பதற்கும் வருடம் ஒருமுறை நடைபெறும் திருவிழா இறுதிநாள் வீதியுலா வருவார் வீரபத்திரர் இரவு வேளை எமது ஊர வீதிகளிலே உலாவரும் அழகு தனிச் சிறப்பு வாய்ந்தது. எமது வாசிகசாலை முன்னால் உள்ள வளவிலே தக்கன்யாகம் வெகுசிறப்பாக நடைபெறும் விடிய விடிய மேளக்கச்சேரிகள் நடைபெறும் ஊர்மக்கள் ஒன்று கூடி இந்தவிழாவில் பங்காற்றுவார்கள் எம் பெருமானை தோழிலே சுமந்து கொண்டு விடியற்காலையில் மீண்டும் ஆலயத்திற்கு வருவார்கள். வீதி நெடுகலும் வாழை தோறணங்கள் மண்டபப்படிகள் அனைத்து மக்களின் வயிறுகளும் பலகாரங்களால் நிறைந்து விடும். இது ஒரு முக்கியமான நிகழ்வாக இன்று வரை தொடர்கின்றது.

எமது ஊரிலே இயற்கையாகப் பல மூலிகைத்தாவரங்கள் காடாக வளர்ந்தன. மூலிகைகளுக்கு கள்ளி என்ற பொதுப் பெயர் கொண்டு அழைப்பார்கள். அதனால் எமது ஊர் கள்ளியங்காடு என்று அழைக்கப்படலாகியது. சங்கிலிய மன்னன் காலத்திலே பல வைத்தியர்கள் எமது ஊரிலே மூலிகை வைத்தியம் செய்துவந்தனர். மூலிகைச்

செடிகளுடன் கூடிவாழ்ந்தமையால் எமது மக்கள் நல்ல ஆரோக்கியமான வீரர்களாயும் அழகிய தோற்றமுடையவராயும் நீண்ட ஆயுள்களுடன் வாழ்ந்தவர்களாயும் காணப்பட்டனர். இதனால் எமது கிராமத்து மக்களுடன் சம்மந்தம் கலக்க குப்பிளான், கட்டப்பிராய் மக்கள் விரும்பினார்கள். இன்றும் இந்த இரண்டு ஊரிலும் எமது இரத்த உறவுகள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

எமது ஊர்மண் வளமான செம்மண். எல்லாப்பயிர்களும் செழித்து வளர்ந்து பலன் தரும் "கீரைச் செய்கைக்கு கள்ளியங்காடு பெயர் போனது" விவசாய நிலங்களான பிராயடி, பருத்தியடைப்பு, வட்டப்புலம், மக்கிக்கிணற்றடி, சின்னக்கிணற்றடி, திப்பிலிக் கிணற்றடி என்று ஆழமான வெட்டுக்கிணறுகளிலே துலாமிதித்தும், மாடுகள் பூட்டி சூத்திரத்தாலும் நீர் பாய்ச்சி வேளாண்மை செய்தார்கள். எமது ஊர்மக்கள் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள்

குலத்தாலும் குலதெய்வத்தாலும் ஒன்றுபட்ட எமது வேளாளர்களின் உழைப்பும், உதிரமும், வியர்வையுமே எமது ஆலய உருவாக்கத்திற்கு அடித்தளமாக அமைந்தன. சிவக்கொழுந்தர் வளவில் நின்ற பலா மாஞ்சோலை நடுவே அமைந்த சிறிய தகரக் கொட்டகையில் பத்திரகாளி சமேதவீரபத்திரர் எழுந்தருளத் தொடங்கினார்.

இன்று மாபெரும் மண்டபங்கள், வானுயர்ந்த கோபுரம் நீர்நிறைந்த தீர்த்தக்கேணி, தேரோடும் அழகிய வீதிகள், அழகிய சிற்பத்தேர் நிமிர்ந்து நிக்கும் தேர்முட்டி புதிதாக கட்டப் பட்டுக் கொண்டு இருக்கும் மாபெரும் திருமண, அன்னதான மண்டபம் அழகிய வாகனங்கள், எம்பெருமான் ஆலயத்திற்கு அணி சேர்க்கின்றன. இன்றைய ஆலயப்பொலிவை பார்க்கும் பொழுது எங்களுடைய கண்களே பட்டுவிடும் அளவிற்கு சிறந்த சிற்ப ஓவிய வேலைப்பாடுகளுடன் எமது ஆலயம் விளங்குகின்றது.

இவை அனைத்திற்கும் காரணமாக எமது குலத்தெய்வத்தின் சக்தியும், வேளை தவறாது நித்திய நைமித்திய பூசைகளையும் கிரிகைகளையும் நேர்த்தியாக செய்து வரும் வரதராஜக்குருக்களின் அர்ப்பணிப்பான பணிகளும், எமது மக்களின் விடாமுயற்சியும், நம்பிக்கையும், இளைஞர்களின் கடின உழைப்பும் குறிப்பாக கனடா தேசத்திலே வாழுகின்ற எமது இளைஞர்களின் பெரு நிதியும் சேர்ந்தே எமது ஆலயம் இன்று புனர்நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

எமது ஊரின் நடுவே சிவனும் பார்வதியும் வீற்றிருக்க கிழக்கே கட்டப்பிராய் முத்து மாரியம்மனும் வடக்கே இருபாலை கற்பக விநாயகரும், மேற்கே இராசவீதியில் பால முருகனும் தெற்கே புலவனார்வீதியில் முக்குறுணிப்பிள்ளையாரும் காவல் தெய்வங்களாக நின்று எமது ஊரைப்பாதுகாக்கின்றனர்.

எமது மக்களை ஆன்மீகத்துடன் சேர்ந்து அறிவாற்றல் உள்ளவர்களாகவும் ஆக்குவதற்கு எமது முன்னவர்களின் முயற்சியினால் எமது ஊருக்கென்றே கல்வியங்காடு

இந்து ஆரம்பப்பாடசாலை உருவாக்கப்பட்டது. எமது கிராமத்து பிள்ளைகள் அனைவருக்கும் ஆரம்பக்கல்வியை வழங்கும் இப்பாடசாலை இன்று யாழ் மாவட்டத்திலேயே முன் மாதிரியான முன்னோடிப்பாடசாலையாகத் திகழ்கின்றது. இங்கு கல்வியைத் தொடங்கிய எமது பிள்ளைகள் இன்று வைத்திய கலாநிதிகளாக, பொறியியலாளராக, விரிவுரையாளர்களாக இன்னும் அதிபர், ஆசிரியர்கள் என்று கல்வி கேள்விகளிலே உயர்ந்தவர்களாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

எமது ஊரை சிறந்தமுறையில் வழிநடத்திய சிதம்பரப்பிள்ளை, தம்பாபிள்ளை ஆகியோர் ஞானபாஸ்கரோத சங்கத்தை உருவாக்கித்தந்து எமது மக்கள் அனைவரையும் எழுத்தறிவுள்ளவாராக்கியதுடன் பல தருமவான்களையும் வழிகாட்டிகளையும் உருவாக்கித்தந்தனர்.

நல்லூர் திருவிழாக்காலத்தில் பெரிய பீப்பாய் வண்டியில் நீர்நிரப்பி செம்மணி சந்தியிலே கால் நடையாக வரும் முருகபத்தர்களுக்கும், காவடி, பிரதட்டை செய்யும் பக்தர்களுக்கும் தண்ணீர் பந்தல் அமைத்து தாகசாந்தி செய்து வந்தனர். இவர்கள் காட்டிய தருமப்பணிகளே எமது மக்களை இன்று வாழ்வித்துக் கொண்டிருக்கின்றன.

யுத்தத்தின் காரணமாக எமது ஊரைச் சேர்ந்த அறிவாளிகளும் உழைப்பாளி களும் குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்து இன்று உலகின் பல் வேறு நாடுகளில் வாழ்கின்றனர். அவர்கள் பயிரிட்ட நிலங்களில் இன்று பல வீடுகள் முளைத்துள்ளன. அவர்கள் வாழ்ந்த வீடுகளில் பிறகிராமத்து மக்கள் வாழ்கின்றனர். தரிசாகக் கிடந்த கலட்டி நிலங்கள் இன்று கல்வீடுகளால் நிரம்பிவழிகின்றன.

இன்றைய காலகட்டத்தில் எமது கிராமத்தில் பல்வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வந்து குடியேறியுள்ளனர். இங்குதான் எமது ஆலயம் ஒரு பெரும் கைங்கரியத்தை நிறைவேற்றப் போகின்றது. எமது கிராமத்தில் வந்து குடியேறியுள்ள அனைவரையும் எமது ஆலயம் இணைத்து உறவாடும் ஒன்று சேர்த்து திருவிழாக்களில் வழிபாடுகளில் இணைந்து செயற்படும் வாய்பினை எமது ஆலயம் வழங்கவுள்ளது.

எங்கள் கிராமத்தை பாதுகாப்பதுடன் மக்கள் அனைவரையும் ஒழுக்கசீலர்களாக வாழ வழிகாட்ட வேண்டிய ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டிய பணிகளை வீரபத்திரர் ஆலயம் செயற்படுத்தும் எமது ஊரில் உள்ள பாடசாலை, முன்பள்ளி ஆகியன ஒன்று இணைந்து செயல்படும். கோடிக்கணக்கான பணத்தை செலவிட்டு உருவான எமது ஆலயத்தை எமது ஊர்மக்கள் பயன்படுத்த வேண்டும். பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும்.

எமது பிள்ளைகளை அறநெறி தெரிந்தவர்களாகவும், நல்ல மனிதர்களாகவும உருவாக்க வேண்டிய பொறுப்பு அனைத்துப் பெற்றோர்களுக்கும் உண்டு. உங்கள் பிள்ளைகளை ஆலய வழிபாட்டில் ஈடுபடுத்தவேண்டும்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

இது யாவரும் அறிந்ததே. பிள்ளைகளை சரியான பாதையில் வழிநடத்த வேண்டும் .

தொடர்ந்தும் எமது கிராமத்தை ல்வழிப் படுத்த வேண்டிய பெரும் பெறுப்பை ஆலய நிர்வாகம் பொறுப்பேற்கும்.

எமது கிரமத்தை நல்வழிப் படுத்த வேண்டிய பெரும் பெறுப்பை எல்லாம் வல்ல எமது குலதெய்வமாம் வீரபத்திரப்பெருமானின் கைளில் விடுகின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க".

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம் நமசிவாய.



# நவசந்திப் பாடல்கள்

சிவ ஆலயங்களில் மஹோற்சவ காலங்களில் நடைபெறும் கொடியேற்ற விழாவின் போதும் கொடி இறக்க விழாவின் போதும் நவசந்திகளில் ஓதப்பெறும் பண்களும் அவற்றிற்குரிய சில திரு முறைப்பாடல்களும் கீழே தரப்படுகின்றன.

## கொடித்தம்பத்தருகில்

பண் :தக்கராம் இராகம் :காம்போதி

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச் சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெல்லாம் செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே

பண்: காந்தாரபஞ்சம் இராகம்: கேதாரகௌளை

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்று எமக்கில்லையேல்
அதுவோவுனதில் னருள் ஆவடுதுறை அரனே.

## பிரும்மசாந்தி (கோபுரவாசல்)

பண் :மேகராகம், மேகராக்குறிஞ்சி இராகம் :நீலாம்பரி

நீறு சேர்வதோர் மெனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர் தலைக் கையர் பராய்த்தறை
ஆறு சேர் சடை அண்ணலே.

## வருண சந்தி (மேற்கு)

பண் :சீகாமரம் இராகம் :நாதநாமக் கிரியை

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தை தொழ நின்று புரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் வேளுரே.

## வாயு சந்தி (வடமேற்கு)

பண் :தக்கேசி இராகம் :காம்போதி

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெரு தேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதா வெனவு நக்கா வெனவு நம்பா வென நின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழக நகராரே.

## குரே சந்தி (வடக்கு)

பண் :தக்கராகம் இராகம் :காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொயடகை கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற்பூச்சுங் கீழ்
உடையும் கொண்ட வுருவ மென்கொலோ.

## ஈசான சந்தி (வடகிழக்கு)

பண் :சாதாரி (சாலாபாணி) இராகம் :பந்துவராளி

மருந்வை மந்திரம் மறுமை நன்
நெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தை செய் நன் நெஞ்சமே
பொருந்து தண் புறவினிற் கொன்றைபொன்
சொரி தரத் துன்றுபைம் பூம்
செருத்தி செம் பொன் மலர் திருநெல்வேலி
யுறைசெல்வர் தாமே.

## இந்திரசந்தி (கிழக்கு)

பண் :காந்தாரம் இராகம் : நவரோஸ்

வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையினானைத் தேவர் தொழப்படுவானைக்
கான மருப்பிணை புல்கிக் கலைபயிலுங்கடம்பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாள் தொழவீடெளிதாமே.

## அக்கினி சந்தி (தென்கிழக்கு)

பண் :கொல்லி இராகம் :நவரோஸ்

தம்மையே புகழ் திச்சை பேசினும்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்த லாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆழ்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

## யமசந்தி (தெற்கு)

பண்:- கௌசிகம் இராகம்:- பைரவி

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருள் ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

## நிருதி சந்தி (தென்மேற்கு)

பண்:- நட்டபாடை இராகம்:- கெம்பீரநாட்டை

உண்ணாமுலை உமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன யருவித்திரண் மழலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ண மறுமே.

# நன்றியுரை

யாழ் மண்ணின் சிற்றூர் கல்வியங்காடு கிராம மக்களின் குல தெய்வமாக விளங்கும் ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர பெருமானின் பாதார விந்தங்களை அவனருளாலே அவன்தாழ் வணங்கி காவல் தெய்வமாக விளங்கும் கிராம மக்களின் ஒளிமயமான வாழ்விற்கு வழிகோலி இருந்து வாழ்வினை சிறப்பாக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இறைவனுக்கு எமது கிராம மக்களினால் கும்பாபிஷேகம் செய்வதற்கு அருள் பாலித்து அதனை வழி நடத்துவதற்கு எமக்கு அந்த பாக்கியத்தினை தந்த வீரபத்திர பெருமானுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றோம்.

இறைவனின் வாக்கிற்கு அமைவாக கும்பாபிஷேகம் செய்வதற்கு எண்ணி ஆலய திருப்பணி வேலைகளான மூலஸ்தானம், சுற்றுப்பிரகார ஆலயங்கள், பரிவார மூர்த்திகளுக்கான நிர்மானங்கள், வில்லு மண்டபம், போன்றவற்றினை சிறுதுளி பெரு வெள்ளம் என்பதற்கு இணங்க அனைத்து வேலைகளையும் தம்பணியாக நினைத்து அதனை செயற்படுத்தி சிறப்புற அமைவதற்கு உறுதுணையாக செயற்பட்ட திருப்பணிசபை உறுப்பினர்கள், ஆலயபரிபாலன சபை உறுப்பினர்கள், கனடா கலாசார ஒன்றியத்தினர், கிராம மற்றும் புலம்பெயர்வாழ் மக்கள், அடியவர்கள் ஆகியோருக்கும், இக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலயத்துக்கென அன்னதான மண்டபத்தையும், கலாசார மண்டபத்தினையும் தாமாக பொறுப்பேற்று அதனை கட்டி முடித்துத்தந்த திரு. பரமேஸ்வரன் குமுதன் அவர்களுக்கும் திரு. சுப்பையா கணேஸ் அவர்களுக்கும் ஆலய பரிபாலன சபையின் சார்பில் நன்றிகளை தெரிவித்து கொள்ளுகின்றோம்.

அது மட்டுமல்லாது எமது ஆலய கிரியைகளை சிறப்புற நடாத்தி தந்த ஆலய பிரதமகுரு "சிவஸ்ரீ பொன். வரதராஜக் குருக்கள் அவர்களுக்கும் ஏனைய ஆச்சாரியார்களுக்கும், கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை, வாழ்த்துரைகள் வழங்கியவர்களுக்கும் இந்நூலினை வடிவமைக்க உதவியோர். மற்றும் அச்சுத்துறையினர் இன்நூலின் தல வரலாற்றினை ஆக்குவதற்கு உதவிய பண்டிதர்கள் திருமதி சந்திரா அவர்களுக்கும், இவ்வாலயத்தின் வரலாற்றினை பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைக்காக தொகுத்து வழங்கி புத்தக வடிவில் தந்த செல்வி சுபாசினி தேவராசா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது ஆலயத்தின் கட்டிட நிர்மானிப்பு வேலைகளுக்கும், மற்றும் அபிவிருத்திக்கும் நிதி உதவி, சரீர உதவி என்பவற்றை வழங்கிய ஊர்மக்கள், நலன் விரும்பிகள், புலம்பெயர் உறவுகள், கனடா கலாசார ஒன்றியம் மற்றும் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆலய கட்டிட அமைப்பு நிர்மானித்தவர்கள், வர்ணம் பூசியவர்கள், மின்னினைப்பு, நீர் வசதி என்பவற்றை நிர்ணயித்து தந்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வேலைகளையும் திறம்பட நடாத்தி குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். கும்பாபிஷேக மண்டலாபிஷேக வைபவத்தில் அந்தணப் பெருமக்களின் மந்திர உச்சரிப்பு, ஒலிகளுடன் மேளவாத்திய இசையை வழங்கி மேலும் சிறப்பித்த கலைஞர்களுக்கும், ஒளி, ஒலி அமைப்பினருக்கும் இத்தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவற்றுடன் கட்டிட வேலைகளுக்கான பொறியியல் ஆலோசனைகளை வழங்கி அதனை நேரடியாக நின்று மேற்பார்வை செய்த பொறிலாளர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

வீரபத்திரப் பெருமானின் ஆலய வளர்ச்சிக்கும், கும்பாபிஷேக நிகழ்வுக்கும் தம்மால் இயன்ற பல்வேறு உதவிகளை வழங்கி தோளோடு தோள்கொடுத்து சிறப்புற நடைபெறுவதற்கு அரும்பாடுபட்ட அடியார்கள், இறைபெரியார்கள், நிர்வாக உறுப்பினர்கள், ஊர்மக்கள், புலம்பெயர் வாழ் மக்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதோடு "வீரபத்திரா வீடுபத்திரம்" என்று எமை காத்துவரும் இறைவனது திருவருள் அனைவருக்கும் கிடைத்து எமது ஊர் சிறப்புபெற எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரபெருமானை வேண்டுகின்றோம்.

நன்றி.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தானம்,**
**கல்வியங்காடு**

**ஆலய பரிபாலன சபையினர்.**


Guru Printers - Tirunelvely.
021 222 8266